


# உதயன்

சுடர் : 41
கதிர் : 197

வியாழக்கிழமை
11 ஜூன் 2026

வைகாசி 28 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2057

பக்கங்கள் – 12
விலை – ரூபா 50


பிரபாகரனின் மகன்

# பாலச்சந்திரனின் படுகொலை விசாரிக்கப்பட வேண்டும்

ரவூப் ஹக்கிம் எம்.பி. வலியுறுத்து



**கொழும்பு, ஜீன் 11**

பிரபாகரனின் மகன் பாலச்சந்திரனின் படுகொலை போர்க் குற்றமாகும். எனவே, அதுதொடர்பில் விசாரணை நடத்தப்பட வேண்டும் - இவ்வாறு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான ரவூப் ஹக்கீம் வலியுறுத்தினார்.

≫11

## மாகாணசபைத் தேர்தலை நடத்தாமல் விடமாட்டோம்

பிரதமர் ஹரிணி தெரிவிப்பு

கொழும்பு, ஜூன் 11
மாகாணசபைத் தேர்தலை நடத்தாமல் இருக்கும் எந்தவொரு முடிவையும் அரசாங்கம் எடுக்கவில்லை. அதேபோல ஜனநாயகம் என்ற போர்வையில் சட்டத்துக்கு புறம்பாகவும் செயல்பட முடியாது என்று பிரதமர் ஹரிணி அமரசூரிய தெரிவித்தார்.
மாகாணசபைத் தேர்தல் தொடர்பில் நாடாளுமன்ற

≫11

கிளிநொச்சியில்

## புதையல்தோண்டிய ஆறுபேர் கைது!

கிளிநொச்சி, ஜூன் 11
கிளிநொச்சி பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட மலையாளபுரம் பகுதியில் புதையல்தோண்ட முற்பட்ட ஆறுபேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.
தனியார் ஒருவருக்குச் சொந்தமான நிலத்தில் தொல்பொருள்கள், கலைப்பொருள்

≫11

## நயினை அம்மன் பெருவிழாவுக்காக 42 தனியார் படகுகள் தயார் நிலை

யாழ்ப்பாணம், ஜூன் 11
நயினாதீவு நாகபூசணி அம்மன் ஆலய வருடாந்தப் பெருவிழா எதிர்வரும் திங்கட்கிழமை ஆரம்பமாகவுள்ள நிலையில், அதை முன்னிட்டு போக்குவரத்துச் சேவையில் ஈடுபடுவதற்காக 42 தனியார் படகுகள் தயார் நிலையில் உள்ளன என்று தெரிவிக்கப்

≫11



## செம்மணிப் புதைகுழியிலிருந்து மேலும் 12 என்புத்தொகுதிகள்

யாழ்ப்பாணம், ஜூன் 11
யாழ்ப்பாணம் செம்மணிப் புதைகுழியில் இருந்து மேலும் 12 என்புத் தொகுதிகள் நேற்று அடையாளம் காணப்பட்டுள்ளன.
செம்மணிப் புதைகுழியின்

≫11

கிளிநொச்சி - தொண்டமான்நகர்

## பேருந்துத் தரிப்பிடத்தில் ஒருவர் சடலமாக மீட்பு!

கிளிநொச்சி, ஜூன் 11
கிளிநொச்சி தொண்டமான் நகர் பேருந்துத் தரிப்பிடத்தில் நேற்று மாலை ஒருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.
சடலம் கிளிநொச்சி மாவட்ட மருத்துவமனைக்கு

≫11

சுதந்திரபுரம் படுகொலை

## 33 பொதுமக்களுக்கு நினைவேந்தல் நேற்று

முல்லைத்தீவு, ஜூன் 11
1998ஆம் ஆண்டு முல்லைத்தீவு - புதுக்குடியிருப்பு - சுதந்திரபுரம் பகுதியில் இலங்கை இராணுவத்தின் தாக்குதலில் உயிரிழந்த 33 அப்பாவிப் பொதுமக்களின் 28ஆவது நினைவேந்தல்

≫11



## சுரேஷ் சாலேவுக்கு ஆதரவான போராட்டம் நேற்றுடன் முடிவு!

கொழும்பு, ஜூன் 11
பயங்கரவாத தடைச்சட்டத்தின்கீழ் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ள சுரேஷ் சாலேவுக்காக முன்னெடுக்கப்பட்ட போராட்டம் நேற்று மாலையுடன் கைவிடப்பட்டது.
தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ள சுரேஷ் சாலே சித்திரவதைக்கு உட்படுத்தப்படுகிறார் எனச் சுட்டிக் காட்டி அதற்கு எதிராகவும், சுரேஷ் சாலேவுக்கு நீதி கோரியும் கொழும்பு

≫11

பண்டத்தரிப்பில்

## நகை திருட்டு இருவர் கைது

யாழ்ப்பாணம், ஜூன் 11
பண்டத்தரிப்பு பற்றிமா வீதியில் நான்கரைப் பவுண் நகை திருடப்பட்டமை தொடர்பில்

≫11



## உயிர்த்தஞாயிறுத் தாக்குதல்களுடன் சுரேஷ் சாலேவுக்குத் நேரடித் தொடர்பு!

நாடாளுமன்றில் அமைச்சர் விஜேபால தகவல்



கொழும்பு, ஜூன் 11
உயிர்த்தஞாயிறுத் தாக்குதலுடன் குற்றப்புலனாய்வுத்திணைக்களத்தின் முன்னாள் பிரதானி சுரேஷ் சாலேவுக்கு நேரடித் தொடர்பு உள்ளது. இதற்கான ஆதாரங்களும் எமக்குக் கிடைத்துள்ளன - இவ்வாறு பொதுப்பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால

≫11

## பாடகர் சங்கீத்சனை உடன் விடுவிக்குக!

ரவிகரன் எம்.பி. வலியுறுத்து

கொழும்பு, ஜூன் 11
பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ள பாடகர் கணேஸ்குமார் சங்கீத்சனை உடனடியாக விடுதலை செய்யவேண்டும் என்று வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் கோரிக்கை

≫11

புரட்சித் தேவன் மூர்த்தி

"வாய் திறக்காமல் இருக்கிற சாலேயை உலையிலே போராட்டம் நடத்தி காட்டிக் குடுக்கினம் கண்டியளோ."

மக்கள் மனம் அறிந்த தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| கொவிசெத | |
|---|---|
| திகதி | 10.06.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 4456 |
| ஆங்கில எழுத்து | G |
| வெற்றி இலக்கங்கள் | 25 47 52 69 |
| விசேட எழுத்து | G |

| ஹந்தஹன ராசி சுப பலன் | |
|---|---|
| திகதி | 10.06.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 1523 |
| வெற்றி இலக்கினம் | இடபம் |
| வெற்றி இலக்கங்கள் | 18 30 33 45 |

| NLB ஜய | |
|---|---|
| திகதி | 10.06.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 0482 |
| ஆங்கில எழுத்து | E |
| வெற்றி இலக்கங்கள் | 7 7 6 1 |

| மெகா பவர் | |
|---|---|
| திகதி | 10.06.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 2562 |
| ஆங்கில எழுத்து | Y |
| சுப்பர் இலக்கம் | 26 |
| வெற்றி இலக்கங்கள் | 26 62 70 76 |

| மஹஜன சம்பத | |
|---|---|
| திகதி | 10.06.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 6214 |
| ஆங்கில எழுத்து | G |
| வெற்றி இலக்கங்கள் | 0 2 3 9 5 8 |

| தன நிதானய | |
|---|---|
| திகதி | 10.06.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 2244 |
| ஆங்கில எழுத்து | B |
| வெற்றி இலக்கங்கள் | 02 22 47 76 |
| விசேட எழுத்து | B |

| சுப தவசக் | |
|---|---|
| திகதி | 10.06.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 0330 |
| வெற்றி இலக்கினம் | மேஷம் |
| வெற்றி இலக்கங்கள் | 14 43 57 |

# பயங்கரவாதத் தடைச்சட்டத்தை உடனே இரத்துச்செய்யவேண்டும்

## சர்வதேச மன்னிப்புச்சபை வலியுறுத்து!

**கொழும்பு, ஜூன் 11**

**இலங்கையில் பயங்கரவாதத் தடைச்சட்டத்தின்கீழ் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்படும் கைதுகள் மற்றும் தடுப்புக்காவல்கள் குறித்து சர்வதேச மன்னிப்புச் சபை தனது பலத்த கவலையை வெளியிட்டுள்ளது. இந்தச் சட்டத்தின் பயன்பாட்டுக்கு உடனடியாக இடைக்காலத் தடை விதிக்கவேண்டும் என்றும், அதனை மேலும் தாமதமின்றி முழுமையாக இரத்துச் செய்யவேண்டும் என்றும் அந்த அமைப்பு வலியுறுத்தியுள்ளது.**

இதுதொடர்பாக சர்வதேச மன்னிப்புச் சபை அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது-

தற்போதைய அரசாங்கம் இச்சட்டத்தை இரத்துச் செய்வதாக உறுதியளித்திருந்த போதிலும், சர்வதேச மனித உரிமைச் சட்டங்களுக்கு முரணான, தெளிவற்ற விதிகளைக்கொண்ட இந்தச் சட்டம் தொடர்ந்து பயன்படுத்தப்படுவது கவலைக்குரியது. தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பை பெருமைப்படுத்தியதாகக்கூறி, 24 வயதுடைய தமிழ் ஹிப்ஹாப் கலைஞர் சங்கீதன் கணேஷ்குமார் ஜூன் 2ஆம் திகதி கைதுசெய்யப்பட்டுள்ளார். சர்வதேச விதிகளுக்கு ஏற்ப உரிய குற்றச்சாட்டு முன்வைக்கப்படாவிடின், அவரை உடனடியாக விடுவிக்க வேண்டும். உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் தொடர்பாகக் கடந்த பெப்ரவரி 25 அன்று கைது செய்யப்பட்ட அரச புலனாய்வுச் சேவையின் முன்னாள் பணிப்பாளர் சுரேஷ் சலே, மனிதாபிமானமற்ற முறையில் நடத்தப்படுவதாகக் குற்றச்சாட்டு கள் எழுந்துள்ளன. உயிர்த்த ஞாயிறு தாக்குதலில் பாதிக்கப்பட்டவர்களுக்கு நியாயமான விசாரணை மூலம் நீதி வழங்கப்படவேண்டும். ஆனால், அது தன்னிச்சையான கைதுகளாகவோ அல்லது மனித உரிமை மீறல்களாகவோ அமையக்கூடாது. போதைப்பொருள் தொடர்பான வழக்குகளிலும் இச்சட்டம் பயன்படுத்தப்படுவதுடன், போதுமான பாதுகாப்பு ஏற்பாடுகள் இல்லாததால் சித்திரவதைகள் நடப்பதற்கான சூழல் நிலவுகிறது. எனவே, பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ள சுரேஷ் சலே உள்ளிட்ட அனைவருக்கும் சட்டப் பாதுகாப்பை உறுதிசெய்ய வேண்டும் என்றும், இச்சட்டத்தின் துஷ்பிரயோகங்கள் குறித்து உடனடி விசாரணை நடத்தப்படவேண்டும் என்றும் சர்வதேச மன்னிப்புச்சபை கோரியுள்ளது. (எ-இ)

## இயக்குநர் இமயம் பாரதிராஜா மறைவு



சென்னை, ஜூன் 11

இயக்குநர் இமயம் பாரதிராஜா உடல்நலக் குறைவு காரணமாகச் சென்னையில் நேற்றுக் காலமானார். அவருக்கு வயது 84. 1977ஆம் ஆண்டு வெளியான '16 வயதினிலே' திரைப் படத்தின் மூலம் இயக்குநராக அறிமுகமான பாரதிராஜா, தமிழ் சினிமாவுக்கு புதியதொரு இலக்கணத்தை எழுதினார். அதுவரை பெரும்பாலும் ஸ்டூடியோவுக்கு உள்ளேயே முடங்கிக் கிடந்த கேமராவை, கிராமத்து வயல்வெளிகளுக்கும், மண் வாசனைக்கும் கொண்டு சேர்த்தார். 'கிழக்கே போகும் ரயில்', 'சிகப்பு ரோஜாக்கள்', 'அலைகள் ஓய்வதில்லை', 'முதல் மரியாதை', 'கருத்தம்மா' என அவர் இயக்கிய அத்தனை திரைப்படங்களும் தமிழ் சினிமாவின் மைல்கற்களாக அமைந்தன. 'என் இனிய தமிழ் மக்களே' என்ற அவரது குரல் ரசிகர்கள் மத்தியில் பெரும் வரவேற்பை பெற்றது.

அவரது படைப்புகளுக்காக நாட்டின் உயரிய 'பத்மஸ்ரீ' விருது வழங்கி மத்திய அரசு அவரை கௌரவித்தது. இதுதவிர பல தேசிய, மாநில விருதுகளையும் பெற்றுள்ளார். கடந்த சில நாள்களாக கடும் உடல்நலக்குறைவால் அவதிப்பட்டு வந்த பாரதிராஜா, நேற்று அதிகாலையில் காலமானார். அவரது மறைவுச் செய்தி திரையுலகினர், ரசிகர்கள் மத்தியில் பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது. பலரும் தங்களது இரங்கலை தெரிவித்து வருகின்றனர். (எ-இ)

## வலுவடையும் இலங்கை ரூபா

கொழும்பு, ஜூன் 11

அமெரிக்க டொலருக்கு நிகராக வீழ்ச்சியடைந்துவந்த இலங்கை ரூபா, நேற்று மீண்டும் வலுவடைந்துள்ளதாக இலங்கை மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

நேற்று அமெரிக்க டொலரின் கொள்வனவு விலை ரூ. 324.66 ஆகவும், விற்பனை விலை ரூ. 335.39 ஆகவும் பதிவாகியுள்ளது என்று இலங்கை மத்திய வங்கி தெரிவித்துள்ளது. (எ-இ)

| சுபிரி தன சம்பத | | |
|---|---|---|
| திகதி | தினம் | வெற்றி வாரம் |
| 10.06.2026 | புதன்கிழமை | 0922 |
| ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | |
| K | 9 6 8 1 5 2 | |

| Super Ball | | |
|---|---|---|
| திகதி | தினம் | |
| 10.06.2026 | புதன்கிழமை | |
| சீட்டிழுப்பு வாரம் | ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் |
| 3188 | V | 45 57 58 70 |

| சனிதா | | |
|---|---|---|
| திகதி | தினம் | |
| 10.06.2026 | புதன்கிழமை | |
| ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
| P | 03 41 46 48 | 5349 |

| SASIRI | |
|---|---|
| திகதி | தினம் |
| 10.06.2026 | புதன்கிழமை |
| வெற்றி வாரம் | வெற்றி இலக்கம் |
| 1018 | 06 26 36 |

| லக்ன ராசி | | |
|---|---|---|
| திகதி | தினம் | |
| 10.06.2026 | புதன்கிழமை | |
| மகரம் | வெற்றி இலக்கம் | சீட்டிழுப்பு வாரம் |
| | 04 43 52 54 | 4900 |

| KAPRUKA | | | |
|---|---|---|---|
| திகதி | தினம் | | |
| 10.06.2026 | புதன்கிழமை | | |
| ஆங்கில எழுத்து | சுப்பர் இலக்கம் | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
| B | 06 | 19 33 39 66 | 2364 |

| அத கோடிபதி | | |
|---|---|---|
| திகதி | தினம் | |
| 10.06.2026 | புதன்கிழமை | |
| ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
| A | 14 65 74 76 | 3014 |

## தங்க விலையில் மாற்றம்

கொழும்பு, ஜூன் 11

கடந்த சில நாள்களாக தங்க விலையில் எந்த மாற்றமும் இல்லாதநிலையில், நேற்று தங்க விலையில் குறிப்பிடத்தக்க வீழ்ச்சி பதிவாகியுள்ளது. அகில இலங்கை நகையக வியாபாரிகள் சங்கம் வெளியிட்டுள்ள தகவலின்படி, 24 கரட் தங்கம் ஒரு பவுணுக்கு 5,000 ரூபாயால் குறைந்துள்ளது. நேற்றைய சந்தை நிலவரத்தின் அடிப்படையில் 24 கரட் தங்கம் ஒரு பவுண் 378,000 ரூபாயாக விற்பனை செய்யப்பட்டது. 22 கரட் தங்கம் ஒரு பவுண் 347,800 ரூபாயாக விற்பனை செய்யப்பட்டுள்ளது. (எ-இ)



## குவைத் பணியாளர் துறையை வலுப்படுத்துவதற்கு நடவடிக்கை

கொழும்பு, ஜூன் 11

குவைத்தின் வீட்டுப் பணியாளர் துறையை ஒழுங்குபடுத்துவதற்கும், அதன் மீதான கண்காணிப்பை வலுப்படுத்துவதற்கும் ஏதுவாக, வீட்டுப்பணியாளர் ஆட்சேர்ப்புத் தொடர்பான புதிய சுற்றறிக்கை ஒன்றை அந்த நாட்டின் உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு வெளியிட்டுள்ளது. இலங்கை உள்ளிட்ட 10 அங்கீகரிக்கப்பட்ட நாடுகளிலிருந்து மட்டும் வீட்டுப் பணியாளர்களைப் பெற்றுக்கொள்வதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளதுடன், மேலும் 27 நாடுகளிலிருந்து பணியாளர்களைத் திரட்டுவதற்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது. வெளியுறவுத்துறை அமைச்சு, சுகாதார அமைச்சு மற்றும் மனிதவள பொது அதிகாரசபை உள்ளிட்ட பல அரச நிறுவனங்களின் அவதானிப்புகள் மற்றும் பரிந்துரைகளின் அடிப்படையிலேயே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக உள்ளூர் ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இலங்கை, இந்தியா, பிலிப்பைன்ஸ், நேபாளம், வியட்நாம், எத்தியோப்பியா, எரித்திரியா, பெனின், தென்னாப்பிரிக்கா, செனகல் ஆகிய நாடுகளிலிருந்து வீட்டுப் பணியாளர்களை ஆட்சேர்ப்புச் செய்ய முடியும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-இ)

## வருண ஜயசுந்தர நீதிமன்றில் ரிட் மனு

கொழும்பு, ஜூன் 11

உயிர்த்த ஞாயிறு பயங்கரவாதத் தாக்குதல் சம்பவம் தொடர்பான விசாரணைகளுக்கு அமைவாக, எவ்வித நியாயமான காரணங்களும் இன்றித் தன்னை கைது செய்வதைத் தடுக்கும் உத்தரவொன்றைப் பிறப்பிக்க வேண்டும் என்று சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் வருண ஜயசுந்தர மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் ரிட் மனுவொன்றைத் தாக்கல் செய்துள்ளார். இந்த மனுவின் பிரதிவாதிகளாகப் பொலிஸ் மா அதிபர் மற்றும் சட்டமா அதிபர்உள்ளிட்ட குழுவினர் பெயரிடப்பட்டுள்ளனர். (எ-இ)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media




# டிஜிற்றல் பொருளாதாரத்தை மேம்படுத்துவதற்கு சட்டம்

## அமைச்சரவை அனுமதி

**கொழும்பு, ஜூன் 11**

**இலங்கையின் டிஜிற்றல் நிலைமாற்றத்தைத் துரிதப்படுத்துவதற்கும், டிஜிற்றல் பொருளாதார வளர்ச்சியை ஊக்குவிப்பதற்குமென 'டிஜிற்றல் பொருளாதாரச் சட்டத்தை' தயாரிப்பதற்கான முன்மொழிவுக்கு அமைச்சரவை அனுமதி அளித்துள்ளது.**

தேசிய டிஜிற்றல் கொள்கை மற்றும் வழிகாட்டல்களை செயற்றிறன்மிக்க வகையில் நடைமுறைப்படுத்துவதற்கு சட்ட அதிகாரங்களைக் கொண்ட புதிய கட்டமைப்புக்கள் அவசியமாகின்றன.

அதன்படி டிஜிற்றல் பொருளாதார சட்ட முன்மொழிவின் மூலம் தொழில்நுட்ப நடைமுறைகள் விரிவுபடுத்தப்பட்டு, அதனூடாக டிஜிற்றல் பொருளாதார நிபுணர்கள் உள்ளீர்க்கப்படுவர்.

மேலும் நாட்டின் டிஜிற்றல் மேம்பாட்டு முயற்சிகளில் தனியார் துறையினரின் தொடர்ச்சியான பங்களிப்பு மிக அவசியம் என்றும் அரசாங்கம் தெரிவித்துள்ளது. (ச-இ)

### க்ளீன் ஸ்ரீலங்காத் திட்டத்தில்

# பொதுச்சுகாதார வசதிகளுக்கு 150 மில்லியன் ரூபா ஒதுக்கீடு

கொழும்பு, ஜூன் 11

நாடளாவிய ரீதியில் நகரப்பகுதிகளில் பொதுச்சுகாதார வசதிகளை மேம்படுத்துவதற்காக 'க்ளீன் ஸ்ரீலங்கா' செயற்றிட்டத்தின்கீழ் 150 மில்லியன் ரூபா நிதியை ஒதுக்கீடு செய்வதற்கு அரசாங்கம் ஒப்புதல் அளித்துள்ளது. நாடு முழுவதும் உள்ள உள்ளூராட்சிமன்றங்களினால் சமர்ப்பிக்கப்பட்ட முன்மொழிவுகளை அடிப்படையாகக்கொண்டு மேற்கொள்ளப்பட்ட மதிப்பீட்டுக்கு அமைவாக இந்த நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. இவ்வாண்டு 26 உள்ளூராட்சிமன்றங்களுக்கு உட்பட்ட பகுதிகளில் 26 செயற்றிட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கு இந்த நிதி பயன்படுத்தப்படும். (ச-இ)



# வாகன இறக்குமதிக்காக 821.3 மில். டொலர் செலவு

கொழும்பு, ஜூன் 11

இந்த ஆண்டின் ஜனவரி முதல் ஏப்ரல் வரையிலான கால கட்டத்தில் நாட்டில் வாகன இறக்குமதிச்செலவு 821.3 மில்லியன் அமெரிக்க டொலராக அதிகரித்துள்ளதாக இலங்கை மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

இலங்கை மத்திய வங்கி வெளியிட்ட சமீபத்திய அறிக்கையில்,

கடந்த ஆண்டு ஜனவரி முதல் ஏப்ரல் வரையிலான காலகட்டத்தில் நாட்டின் மொத்த வாகன இறக்குமதிச் செலவு 194 மில்லியன் அமெரிக்க டொலராக மட்டுமே இருந்துள்ளது.

இந்த ஆண்டு 821.3 மில்லியன் அமெரிக்க டொலர் மொத்த வாகன இறக்குமதிச் செலவில், 621.1 மில்லியன் அமெரிக்க டொலர் தனியார் வாகன இறக்குமதிச் செலவும், மீதமுள்ள 200.2 மில்லியன் அமெரிக்க டொலர் வர்த்தக வாகன இறக்குமதிச் செலவாகவும் பதிவாகியுள்ளது. என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

# முந்திரி பறித்தவர் அடித்துக்கொலை



## எட்டுப் பேர் கைது

கொழும்பு, ஜூன் 11

புத்தளம், வனாத்தவில்லு, காரைதீவு பகுதியில் அமைந்துள்ள முந்திரி பயிர்ச்செய்கைத் தோட்டத்தில், நபர் ஒருவர் அடித்துக் கொலை செய்யப்பட்டுள்ளார். அத்துடன் அவர் மீது துப்பாக்கிப் பிரயோகமும் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக வனாத்தவில்லுப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை அதிகாலை வேளையில் இடம்பெற்றுள்ளது. இந்தச் சம்பவத்தில் கல்லடிப் பகுதியைச் சேர்ந்த 34 வயதுடைய இளைஞர் ஒருவரே உயிரிழந்துள்ளார். உயிரிழந்த இளைஞர் குறித்த தோட்டத்துக்குள் முந்திரிப் பழங்களைச் சேகரிப்பதற்காகச் சென்றுள்ள போதே அங்கு காவற்கடமையில் ஈடுபட்டிருந்த தோட்டக் காவலர்களிடம் அவர் சிக்கியுள்ளார். அவர்கள் அந்த இளைஞரை மிகக் கொடூரமான முறையில் தாக்கியுள்ளனர். அந்தத் தோட்டத்தில் கடமையாற்றிய 8 காவலாளிகளைச் சந்தேகத்தின் பேரில் பொலிஸார் கைதுசெய்துள்ளனர். வனாத்தவில்லு பொலிஸார் இதுகுறித்து மேலதிக விசாரணைகளில் ஈடுபட்டுள்ளனர். (ச-இ)

# 76,000 தோட்டத்தொழிலாளர்கள் நிரந்தர ஊழியர்களாகப் பணி

கொழும்பு, ஜூன் 11

பிராந்திய பெருந்தோட்டக் கம்பனிகளின்கீழ் 76 ஆயிரத்து 44 தோட்டத் தொழிலாளர்கள் நிரந்த தொழிலாளர்களாக வேலை செய்கின்றனர் என்று பெருந்தோட்ட மற்றும் சமூக உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சர் நாடாளுமன்றில் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

18 ஆயிரத்து 955 பேர் தற்காலிகத் தொழிலாளர்களாக வேலை செய்கின்றனர். மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபையின்கீழ் 2,736 பேர் நிரந்தர தொழிலாளர்களாக வேலை செய்கின்றனர். தற்காலிகத் தொழிலாளர்கள் இல்லை.

அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்தின்கீழ் நிரந்தரத் தொழிலாளர்களாக 1, 524 பேரும், தற்காலிகத் தொழிலாளர்களாக 573 பேரும் வேலை செய்கின்றனர்- என்றார். (ச-44)

# ஒரு பொம்மலாட்டம் நடக்குது...!

அரச புலனாய்வுச் சேவையின்ர முன்னாள் பிரதானி சுரேஷ் சாலே தான் ஈஸ்டர் தாக்குதலின்ர சூத்திரதாரி எண்ட சந்தேகத்தில, பயங்கரவாதத் தடைச்சட்டத்தில பிடிபட்டு சிறைக்குள்ள இருக்கிறார். ஆனால் ஆள் சிறைக்குள்ள இருந்தாலும் அரசாங்கத்துக்கு அலுப்புக் குடுக்கிறதை மட்டும் விடேலை. அவருக்கு ஒருநாள் சோத்தோட முள்ளங்கிச் சொதி குடுத்திட்டினமாம். உடனேயே அடுத்த நாள் தன்னைப் பாக்க வந்த மகனிட்ட 'நான் இருக்கிற 'செல்' சரியில்லை, சாப்பாடும் வாயிலை வைக்கேலாது, இந்த நுளம்புக்கடிக்குள்ள நான் சாகேலாது. கெதியா என்னை விடச் சொல்லி வெளியால போராட்டங்கள் நடத்துங்கோ.நானும் உள்ளுக்க இருந்தபடி போராடப்போறன்' எண்டு சொல்லிப் போட்டு, 'சாகும்வரை உண்ணாவிரதம்' இருக்கத் தொடங்கிட்டார். அதால வேற வழியில்லாமல் இப்ப ஆளைக் கொண்டந்து கொழும்பு பெரியாஸ்பத்திரியில வைச்சிருக்கினம். சாலே என்ன பிளான் போட்டாரோ அது நடந்திட்டுது.அவருக்கு சிறையில இருக்காமல் வெளியால வரோணும். அப்பதான் அவரைப் பாக்கிற சாட்டில வாற 'சிலரோட' கதைச்சு அடுத்த கட்டம்என்ன செய்யலாம்எண்டு ஐடியா எடுக்கலாம். அதுக்காகத் தான் உண்ணாவிரதம்,சாப்பாடு சரியில்லை எண்டு சாட்டுகளைச் சொல்லி பெரியாஸ் பத்திரிக்கு வந்திருக்கிறார்.

சுரேஷ் சாலேக்கு தாளம் போடுற மாதிரி வீரவன்ஸ, கம்மன்பில, சரத் வீரசேகர, டிரான் அலஸ் எண்ட பேரினவாதக்கூட்டம் புறக்கோட்டை புகையிரத நிலையத்துக்கு முன்னால 'சத்தியாக்கிரகம்' என்ற பேரில கோமாளிக்கூத்து ஆடியிருக்கினம். அந்த ஆர்ப்பாட்டத்தை ஒருக்கா எட்டிப்பார்க்கேக்க, சத்தியாக்கிரகத்தில நிக்கிற ஆக்களைவிட சுரேஷ் சாலேயின்ர போஸ்டர்கள் தான் கூடவா இருந்ததாம். ஆர்ப்பாட்டத்துக்கு வந்தவைக்கு எண்டு இருபது 'ப்ரைட் ரைஸ்' ஓர்டர் பண்ணினவையாம், ஆனால் அதில அரைவாசி மிஞ்சிப் போட்டுதாம். இப்ப தெரியுதோ அந்த ஆர்ப்பாட்டத்தின்ர லட்சணம் என்னவெண்டு.

'யுத்த வெற்றி' எண்டு அரதப்பழசான கதையளைச் சொல்லி, சனத்தின்ர மண்டையைக் கழுவின காலம் இப்ப மலையேறிப்போட்டுது. தமிழ்ச் சனத்தை இவ்வளவு காலமும் ஒடுக்கிறதுக்காக இதே வீரவன்ஸவும், கம்மன்பிலவும் 'பயங்கரவாதத் தடைச் சட்டத்தை' ஆதரிச்சவை. இப்ப தங்கடஆளுக்கு அதே சட்டம் பாய்ஞ்ச உடனே திடீரெண்டு 'பயங்கரவாதத் தடைச்சட்டம் பயங்கரமான சட்டம்' எண்டு மண்ணெண்ணெய் பட்ட சாரைப்பாம்புமாதிரி துடிக்கினம். பிரதி சொலிசிட்டர் ஜெனரல் திலீப பீரிஸ், ஈஸ்டர் குண்டு வெடிப்பின்ர 'மகா மூளையே' சுரேஷ் சாலே தான் எண்டுகிறார். அப்பிடியெண்டால், அந்த மகாமூளையை விடுவிக்க இந்த விமல் வீரவன்ஸவும் கம்மன்பிலவும் ஏன் இவ்வளவு மும்முரமா அடிபடுகினம்? உள்ளுக்குள்ள இருக்கிற சுரேஷ் சாலே வாய் திறந்து உண்மைகளைக் கக்கினால், இந்த ஈஸ்டர் தாக்குதலின்ர பின்னணியில இருக்கிற பேரினவாத 'பெரிய தலைகளின்ர' குட்டும் வெளியில வந்திடும் எண்ட பயம் தான் இவைக்கு! அந்த உண்மையளை மூடிமறைக்கத் தான் இப்பிடி யொரு பொம்மலாட்டத்தை ஆடுகினம் கண்டியளோ!

padsi@uthayan.com - பட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# ‘கருவி’ நிறுவனத்தின் 13ஆவது ஆண்டு விழா

யாழ்ப்பாணம், ஜூன் 11

நீர்வேலியில் மாற்றுத்திறனாளிகளுக்காகப் பணியாற்றும் ‘கருவி’ நிறுவனத்தின் 13ஆவது ஆண்டு விழா நாளை 12ஆம் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு யாழ்ப்பாணம், நீர்வேலி தெற்கு, பூதர்மடம் ஒழுங்கையில் அமைந்துள்ள கருவி நிறுவனத்தின் நடுவப் பணியகத்தில் நடைபெறவுள்ளது.

கருவி நிறுவனத்தின் தலைவர் க. சர்வானந்தா தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் சிறப்பு விருந்தினர்களா வடக்குமாகாண நன்நடத்தை மற்றும் சிறார் நலச்சேவைகள் ஆணையாளர் திருமதி. சுஜீபா சிவதாஸ், கோப்பாய் மருத்துவ அதிகாரி பணிமனை பொறுப்பு மருத்துவ அதிகாரி மருத்துவகலாநிதி எஸ். சிவகோணேசன், சுயாதீன ஊடகவியலாளர் எம். நிலாந்தன், சட்டத்தரணி சோ. தேவராஜா, யாழ். மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை அதிகர் ஐ. எம். முரளிதரன் ஆகியோர் பங்கேற்கவுள்ளனர்.

நிகழ்வில் விசேட அம்சமாக, கருவி நிறுவனத்தினால் அண்மையில் நடத்தப்பட்ட விசேட வினாவிடைப் போட்டியில் வெற்றியாளர்களாகத் தெரிவுசெய்யப்பட்ட மாணவர்களுக்கான பரிசில்களும் பாராட்டுச் சான்றிதழ்களும் வழங்கிக் கௌரவிக்கப்படவுள்ளது.

இந்தப் போட்டியின் வெற்றியாளர்கள் விவரங்களை கருவி நிறுவனத்தின் உத்தியோகபூர்வ பேஸ்புக் பக்கமான ‘Karuvi Differently Abled என்ற தளத்தில் பார்வையிடமுடியும் என நிறுவன நிருவாகத்தினர் அறிவித்துள்ளனர் (ச)

# மயிலிட்டி கண்ணகை அம்மன் அலங்கார உற்சவம் ஆரம்பம்!

யாழ்ப்பாணம், ஜூன் 11

மயிலிட்டி வீரமாணிக்க தேவன்துறை அருள்மிகு கண்ணகை அம்மன் ஆலயத்தின் பராபவ வருட அலங்கார உற்சவம் எதிர்வரும் 15 ஆம் திகதி காலை 10 மணிக்கு கும்ப பூசையுடன் ஆரம்பமாகி தொடர்ந்து 21 நாள்கள் இடம்பெறவுள்ளது.

எதிர்வரும் 27 ஆம் திகதி சப்பறத திருவிழாவும், 28 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை இரதோற்சவும், 29 ஆம் திகதி திங்கட்கிழமை சமுத்திர தீர்த்தமும், 30ஆம் திகதி பூங்காவனமும், ஜூலை முதலாம் திகதி தெப்பத்திருவிழாவும், 2ஆம் திகதி நவசக்தி அர்ச்சனையும் இடம்பெறவுள்ளது.

தொடர்ந்து 3ஆம் திகதி வெள்ளிக்கிழமை வசந்த உற்சவமும் இடம்பெறவுள்ளது. வசந்த உற்சவத்தின்போது புதிய புஸ்பக விமான வாகனத்தில் கண்ணகை அம்பாள் எழுந்தருளி வீதியுலா வர உள்ளமை சிறப்பம்சமாகும்.

வருடாந்த அலங்கார உற்சவகாலத்தில் தினமும் விசேடஅபிஷேகம், விஷேட பூசை வழிபாடுகளைத் தொடர்ந்து பகல் அன்னதானம் வழங்கப்படும். (ச-100)



## வடமாகாணத்தில்
# ஒரு இலட்சம் பனங்கன்றுகளை நடும் பசுமைத்திட்டம் ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஜூன் 11

வடமாகாணத்தின் இயற்கை வளம் மற்றும் பாரம்பரியத்தைப் பாதுகாக்கும்நோக்கில் ‘Safe a Life’ நிறுவனத்தினர் ஒரு இலட்சம் பனை மரங்களை நடும் பாரியதொரு புதிய பசுமை முயற்சியை ஆரம்பித்துள்ளனர். ‘பனை மரம் எமது பாரம்பரியம், எமது எதிர்காலம்’ எனும் தூரநோக்குக் கருப்பொருளின் கீழ் இந்தச் சூழல் மேம்பாட்டுத்திட்டம் வடமாகாணம் முழுவதும் விரிவுபடுத்தப்படவுள்ளது.

வடமாகாணத்தின் பல்வேறு மாவட்டங்களையும் உள்ளடக்கியதாக சுமார் 1000 ஹெக்டேயர் பரப்பளவில், முதற்கட்டமாக ஒரு இலட்சம் பனை மரங்களை நடுவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.

திட்டத்தின் மூலம் இளைஞர்களின் பங்களிப்புடன் நிலப் பரப்பு மீளுருவாக்கம், சுற்றுச்சூழல் பாதுகாப்பு மற்றும் பனைப் பாரம்பரியத்தைப் பேணுதல் பசுமைப் பயணத்தில் அனைவரையும் இணைந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. (ச-இ)

## பரு. நகர வர்த்தக நிலையங்களுக்கு
# ஞாயிற்றுக்கிழமைகளில் இனிக் கட்டாய விடுமுறை!

யாழ்ப்பாணம், ஜூன் 11

பருத்தித்துறை நகர வர்த்தக நிலையங்களுக்கு, ஞாயிற்றுக்கிழமைகளில் கட்டாய விடுமுறை தொடர்ந்தும் நடைமுறைப்படுத்தப்படும். பருத்தித்துறை நகரசபை பொது மண்டபத்தில் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்ற விசேட பொதுக்கூட்டத்தில் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

ஒரு நகரத்தின் வளர்ச்சியிலும், எழுச்சியிலும் வர்த்தகர்களின் பங்கு மிகமுக்கியமானது. வர்த்தகர்கள் ஒற்றுமையாக செயற்படுவதன் மூலமே அதனை அடைய முடியும். ஞாயிற்றுக்கிழமை விடுமுறை அரச உத்தியோகத்தர்களே அனுபவித்துவருகின்றோம். ஆனால் தனியார் துறையினர் மற்றும் வர்த்தகர்களுக்கு அது கனவாகவே உள்ளது. வர்த்தகர் சங்கத்தின் ஊடாக கிடைத்துள்ள இந்த நல்ல சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி வாரத்தில் ஒருநாள் குடும்பத்தினருடன் மகிழ்ச்சியாக இருக்கலாம். வர்த்தக சங்கத்தின் தீர்மானத்தை ஏற்று ஒற்றுமையாக அனைவரும் செயற்பட வேண்டும் என்று பருத்தித்துறை நகரசபைச் செயலாளர் ச.பிரசாத் இதன்போது தெரிவித்தார்.

தொடர்ந்து வர்த்தகர்களிடம் கருத்துகள் கேட்கப்பட்டன. பெரும்பாலான வர்த்தகர்கள் ஞாயிற்றுக்கிழமை கட்டாய விடுமுறைத் தீர்மானத்தைத் தொடர்ந்து நடைமுறைப்படுத்துவதற்கு ஆதரவு தெரிவித்தனர். இதையடுத்து இந்தத் தீர்மானத்தைத் தொடர்வது எனத் தீர்மானிக்கப்பட்டது. எதிர்வரும் நாள்களில் இதனை முழுமையாக நடைமுறைப்படுத்தத் தேவையான ஒத்துழைப்புகள் வழங்கப்படும் என்று பருத்தித்துறைப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தெரிவித்தார். (க-100)

# தாதியர் மாணவர்களுக்கு இணையவழி விண்ணப்பம்

யாழ்ப்பாணம், ஜூன் 11

தாதியர் மாணவர்களை உள்வாங்க சுகாதார அமைச்சு இணையவழியூடாக விண்ணப்பங்களைக் கோரியுள்ளது.

விண்ணப்பதாரிகள் 2021,2022, 2023, மற்றும் 2024 ஆம் ஆண்டுகளில் க.பொ.த. உயர்தரத்தில் உயிரியல் அல்லது பௌதிகவியல் பிரிவில் 3 பாடங்கள் சித்தியுடன் க.பொ.த. சாதாரண தரத்தில் தமிழ்,கணிதம், விஞ்ஞானம், மற்றும் ஆங்கிலத்தில் திறமைச் சித்தியுடன் 6 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். விண்ணப்பங்களை 30.06.2026 ஆம் திகதி வரை சுகாதார அமைச்சு இணையத்தளம் ஊடாக விண்ணப்பிக்க முடியும்.

மேலதிக தகவலுக்கு www.health.gov.lk மற்றும் 29.05.2026 ஆம் திகதியன்று 2487 இலக்க வர்த்தமானி பத்திரிகை வாயிலாக அல்லது 0713526234 கலக்கத்துடன் தொடர்புகொள்ளலாம் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

# இன்றைய ராசி உங்களுக்கு எப்படி?

**மேடம்:** வாழ்க்கைத்துணைவழி உறவுகளிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். சிலருக்கு எதிர்பாராத பணவரவுக்கும் வாய்ப்பு உண்டு. மாலையில் குடும்பத்தினருடன் உறவினர் வீட்டு விசேஷங்களில் கலந்துகொள்வீர்கள்.

**இடபம்:** இன்று பொறுமையுடன் செயற்பட வேண்டிய நாள். எதிர்பாராத செலவுகளால் கடன் வாங்கவும் நேரிடும். குடும்பத்தில் உள்ளவர்களின் தேவைகளுக்காக பாடுபடவேண்டி இருக்கும். உறவினர் வருகை உற்சாகம் தரும்.

**மிதுனம்:** குடும்பத்தினர் உங்கள் ஆலோசனையை ஏற்றுக்கொள்வார்கள். வாழ்க்கைத் துணைவழி உறவுகளால் எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு இருப்பதுடன், எதிர்பாராத செலவுகளும் ஏற்படக்கூடும்.

**கடகம்:** உற்சாகமான நாள். குடும்பத்தில் உங்கள் ஆலோசனைக்கு முக்கியத்துவம் கிடைக்கும். பிற்பகலுக்குமேல் பிள்ளைகளால் பெருமை உண்டாகும். அவர்கள் கேட்டதை வாங்கிக் கொடுப்பீர்கள்.

**சிம்மம்:** புதிய முயற்சிகளைத் தவிர்க்கவும். வழக்கமான பணிகளிலும் கூடுதல் கவனம் தேவை. மற்றவர்களுடன் வீண்மனஸ்தாபம் ஏற்படக்கூடும் என்பதால், பேசும்போது பொறுமையைக் கடைப் பிடிக்கவும்.

**கன்னி:** மனதில் தன்னம்பிக்கையும் தைரியமும் அதிகரிக்கும். முக்கியமான முடிவு எடுப்பதற்கு உகந்த நாள். கணவன்-மனைவிக் கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும்.

**துலாம்:** உறவினர்கள் வருகையால் வீட்டில் கலகலப்பான சூழ்நிலை ஏற்படும். ஆனால், புதிய முயற்சிகளைப் பிற்பகலுக்கு மேல் தொடங்கு வது நல்லது.

**விருச்சிகம்:**. புதிய முயற்சிகள் சாதகமாக முடியும். எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. சகோதரவகையில் எதிர்பாராத செலவுகள் ஏற்படக்கூடும். தாய்வழி உற [illegible]

**தனுசு:** பிள்ளைகள் கேட்டதை வாங்கிக் கொடுப்பீர்கள். வயிறு தொடர்பான பிரச்சினைகள் ஏற்படும் என்பதால் உணவு விஷயத்தில் கவனம் தேவை.

**மகரம்:** மகிழ்ச்சியான நாளாக அமையும். அரசாங்கக் காரியங்கள் அனுகூலமாக முடியும். புதிய முயற்சிகள் சாதகமாக முடியும்.

**கும்பம்:** புதிய முயற்சிகளைத் தவிர்க்கவும். உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. உறவினர்கள் உதவி கேட்டு வருவார்கள். தாய்மாமன்வழியில் எதிர்பாராத செலவுகள் ஏற்படக்கூடும்.

**மீனம்:** அனுகூலமான நாள். தாயின் விருப்பத்தைப்பூர்த்தி செய்வீர்கள். இளைய சகோதர வகையில் செலவுகள் ஏற்படக்கூடும். மற்றவர்களுடன் வாக்குவாதம் செய்வதைத் தவிர்க்கவும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

உண்மை - நேர்மை - அஞ்சாமை






## பொய்யாமொழி

**ஒழுக்க முடையவர்க்கு ஒல்லாவே தீய**
**வழுக்கியும் வாயாற் சொலல்**

**பொருள்:** தீய சொற்களை தவறியும் தம்முடைய வாயால் சொல்லும் குற்றம், ஒழுக்கம் உடையவர்க்குப் பொருந்தாத தாகும்.

# நீளும் பற்றாக்குறைகள்..!

புற்றுநோய் மருந்துகளுக்கு நாட்டில் கடுமையான தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. இதனால் புற்றுநோயின் பாதிப்புக்கு உள்ளானவர்களும், அவர்களின் உறவினர்களும் பெரும் சிரமத்தை எதிர்கொண்டுவருகின்றனர் என்று சுட்டிக்காட்டியுள்ளார் மருத்துவ மற்றும் சிவில் உரிமைகளுக்கான மருத்துவர்கள் தொழிற்சங்கக் கூட்டணியின் தலைவரும் மருத்துவருமான சமல்சஞ்சீவ. நாட்டில் அத்தியாவசிய மருந்துகளினதும், மருத்துவ சாதனங்களினதும் பற்றாக்குறை அபாயக் கட்டத்தை எட்டிவருகின்றது என்று அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் அண்மைக்காலமாக தொடர் எச்சரிக்கைகளை வழங்கிவருகின்றது. இதன் தொடர்ச்சியாகவே மருத்துவர் சமல் சஞ்சீவவின் கருத்துகள் அமைந்துள்ளன.

நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி நிலையால் கடுமையான பாதிப்புக்கு உள்ளாகியுள்ள துறையாக சுகாதாரத்துறை காணப்படுகின்றது. இதுதொடர்பில் நாடாளுமன்றத்திலும், நாடாளுமன்றுக்கு வெளியிலும் பலநூறு தடவைகள் பல்வேறு தரப்பினரும் சுட்டிக்காட்டியபோதிலும் பற்றாக்குறை ஒன்றுதான் நாட்டில் மிச்சமாகியுள்ளது. மருந்து வகைகளின் விலைகள் பலமடங்கு அதிகரித்திருக்கின்றன. பொருளாதார நெருக்கடியால் ஏற்பட்டுள்ள வருமானத்துக்கு மீறிய செலவால் அந்தரித்துக் கொண்டிருக்கும் மக்களுக்கு, மருந்துப் பொருள்களின் விலையேற்றம் பேரிடியாக இறங்கியிருக்கின்றது. மருத்துவச் செலவுகளுக்கு அஞ்சி சிகிச்சையைத் தவிர்க்கும் நிலைக்கு இலங்கையர்கள் தள்ளப்பட்டு வருகின்றனர்.

நாட்டின் ஒட்டுமொத்த மருத்துவக் கட்டமைப்பில் ஆயிரக் கணக்கான மருந்துகளுக்குத் தற்போது தட்டுப்பாடு நிலவுகின்றது என அறியமுடிகின்றது. உயிராபத்தான நோய்களின் நிவாரணிகளும் இதில் அடங்குகின்றன. நாட்டில் நிலவும் மருந்துத் தட்டுப்பாட்டை நீக்குவதற்குப் பல்வேறு நடவடிக்கைகள் இடம்பெறுவதாக அரசாங்கத் துறைக்குப் பொறுப்பான அமைச்சரும் கடந்த சில மாதங்களாகத் தொடர்ச்சியாகக் கூறிவருகின்றனர். எனினும் மருத்துவக் கட்டமைப்பில் மாற்றங்கள் இருப்பதாகத் தெரியவில்லை. ஒரு நோயாளிக்கு எத்தகைய மருத்துவம் தேவையோ அதைத் துல்லியமாகச் செய்யாமல், இருப்பதை வைத்துச் சமாளிக்கவேண்டிய நிலையே ஏற்பட்டுள்ளதாக நிபுணர்கள் கூறுகின்றனர். இந் தப் பாரதூரமானகருத்தை அரசாங்கம் புறமொதுக்க முடியாது.

உலகளாவிய பதற்றங்களாலும், நெருக்கடிகளாலுமே இந்தநிலைமை ஏற்பட்டுள்ளதாக அரசாங்கம் கூறலாம். அவ்வாறு கூறின் அது ஏற்கத்தக்க விடயம்தான். ஆனால், காரணங்கள் கேட்பதற்கான காலம் இதுவல்ல. தற்போதுள்ள நிலைமை தொடருமானால் நாட்டின் மருத்துவக் கட்டமைப்பு முழுமையாகவே உடைந்துவிடும். அதனால் ஏற்படும் பேரழிவு முன்னெப்போதும் கண்டிராதவகையிலேயே இருக்கும். எனவே, இந்த நெருக்கடியை எதிர்கொள்வதற்கு பரந்துபட்ட திட்டங்களை அதி விரைவாக மேற் கொள்வதற்கு திசைகாட்டி அரசாங்கம் நடவடிக் கைகளில் இறங்கவேண்டும். மருத்துவத்துறையில் ஏற்பட்டுள்ள பற்றாக்குறையும், பலவீனமும் நிமிடங்களுக்குள் சரிசெய்யப்பட வேண்டியவிடயம். அதில் மாதக் கணக்காகவும், வருடக் கணக்காகவும் நீடிக்கும் இழுத்தடிப்பு மன்னிக்கப்பட முடியாத பாரதூரமான குற்றம்.




### போக்குவரத்து விதிமீறல்

# புள்ளி குறைப்பு முறைமை செப்ரெம்பரில் நடைமுறை



கொழும்பு, ஜூன் 11

**போக்குவரத்து விதிமீறல்களுக்கான புள்ளி குறைப்பு முறையை எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் நாடுமுழுவதும் ஒரு முன்னோடித் திட்டமாக அறிமுகப்படுத்த அரசாங்கம் திட்டமிட்டுள்ளதாக போக்குவரத்து நெடுஞ்சாலைகள் மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சர் பிமல் ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.**

நாடாளுமன்றில் அவர் மேலும் தெரிவிக்கையில்,
கடந்த ஆண்டில் சாலை விபத்துகளினால் 2,750 மரணங்கள் பதிவாகியுள்ளன. அவற்றில் ஆயிரம் மரணங்கள் மோட்டார் சைக்கிள் ஓட்டுநர்களுடையது. மேலும் 1,000 மரணங்கள் பாதசாரிகளுடையது. வாகனங்களில் பயணித்தவர்களில் சராசரியாக 650 மரணங்கள் மட்டுமே பதிவாகியுள்ளன. சாலை விபத்து மரணங்களைத் தடுப்பதற்கு ஒழுக்கமான ஓட்டுநர் அவசியமானவர். புள்ளி குறைப்பு முறைமை இல்லாமல் ஓர் ஒழுக்கமான சாரதிகளை எம்மால் உருவாக்கமுடியாது - என்றார். (ச-44)

## மோடிக்கு அநுர வாழ்த்து

கொழும்பு, ஜூன் 11
தொடர்ச்சியாக பிரதமர் பதவியில் 4,399 நாட்களைப் பூர்த்திசெய்து நீண்ட காலம் பதவியில் இருந்த இந்தியப் பிரதமர் என்ற வரலாற்று சாதனையை இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி படைத்துள்ளார்.
இந்தச் சிறப்பான தருணத்துக்கு ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தனது வாழ்த்துகளைத் தெரிவித்துள்ளார். ஜனாதிபதி அநுரகுமார, இந்தியப் பிரதமர் நரேந்திரமோடிக்கு கடிதம் ஒன்றை அனுப்பிதனது வாழ்த்துகளைத் தெரிவித்துள்ளார். (ச-இ)

## முன்னாள் கடற்படைத் தளபதி ஆட்கடத்தல் வழக்கில் அழைப்பு

கொழும்பு, ஜூன் 11
கப்பல், ஆட்கடத்தல் குற்றச்சாட்டில் முன்னாள் கடற்படைத் தளபதியான அட்மிரல் ரவீந்திர விஜேகுணரத்ன எதிர்வரும் 27ஆம் திகதி கோட்டை நீதவான் நீதிமன்றத்தில் நீதி ஆஜராகுமாறு அழைப்பாணை விடுக்கப்பட்டுள்ளது.
கொழும்பு மற்றும் அதன் சுற்றியுள்ள பகுதிகளில் கப்பம் கோரி 11 பேரைக் கடத்தி காணாமல் ஆக்கியதாகக் கூறப்படும் வழக்கில், முன்னாள் கடற்படைத் தளபதியான அட்மிரல் ரவீந்திர விஜேகுணரத்ன சந்தேகநபராக பெயரிடப்பட்டுள்ளார். (ச-இ)

## பலத்த காற்று

கொழும்பு, ஜூன் 11
காங்கேசன்துறையிலிருந்து மன்னார் வழியாக கற்பிட்டி வரையிலான கடற்பகுதிகளில் காற்றின்வேகம் மணிக்கு 60-70 கிலோமீற்றர் வரை அதிகரிக்கக்கூடுமென வளிமண்டலவியல் திணைக்களம் எச்சரிக்கை விடுத்துள்ளது. அதே வேளை, திருகோணமலை முதல் முல்லைத்தீவு வழியாக காங்கேசன்துறை வரையிலும் பொத்துவில் வரையிலும் காற்றின் வேகம் மணிக்கு 50-60 கிலோமீற்றர்வரை அதிகரிக்க வாய்ப்புள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.
இதனால், மறு அறிவிப்பு வரும் வரை கடல்சார் மற்றும் மீன்பிடி சமூகத்தினர் குறித்த கடற்பகுதிகளில் கப்பல் பயணம் மற்றும் மீன்பிடி நடவடிக்கைகளைத் தவிர்க்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது. (ச-இ)

## யோஷித, டெய்சி பாட்டி வழக்கு ஒத்திவைப்பு!

கொழும்பு, ஜூன் 11
பணமோசடித் தடுப்புச்சட்டத்தின்கீழ், முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சவின் புதல்வர் யோஷித ராஜபக்ச மற்றும் அவரது பாட்டி டெய்சி போரஸ்ட் ஆகியோருக்கு எதிராக சட்டமா அதிபரினால் தாக்கல் செய்யப்பட்டுள்ள மற்றுமொரு வழக்கை ஜூலை மாதம் 16 ஆம் திகதி அழைக்குமாறு கொழும்பு மேல் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.
இந்த வழக்கு நேற்றுக் கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி ரஷ்மி சிங்கப்புலி முன்னிலையில் எடுத்துக்கொள்ளப்பட்டபோது பிரதிவாதிகளான யோஷித ராஜபக்ச மற்றும் டெய்சி போரஸ்ட் ஆகியோர் நீதிமன்றத்தில் முன்னிலையாகியிருந்தனர். (ச-இ)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media



# நெதன்யாகுவுடன் பேசவுள்ள ட்ரம்ப்

லண்டன், ஜூன் 11

அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகுவை தாக்குதல் நடத்த வேண்டாம் என தடுத்தும், வார இறுதியில் ஈரான் மீது இஸ்ரேல் நடத்திய பதில் தாக்குதல்கள், மத்திய கிழக்கில் பெரும் பதற்றத்தை ஏற்படுத்தியுள்ளன.

இந்த தாக்குதலானது, ஈரான் மற்றும் அமெரிக்கா இடையே நேரடி மோதல் உருவாகும் அபாயத்தை அதிகரித்துள்ளது.

லெபனான் தலைநகர் பெய்ரூட் மீது இஸ்ரேல் நடத்திய தாக்குதலுக்குப் பழிவாங்கும் நிலையில், ஈரான் ஏவுகணைகளை வீசியது. இதற்குப் பதிலடி கொடுக்கும் வகையில், ஏப்ரல் மாத போர் நிறுத்தத்திற்குப் பின் முதல் முறையாக இஸ்ரேல் ஈரான் மீது குண்டு வீசியுள்ளது.

அமெரிக்காவும் இஸ்ரேலும் ஈரான் மீது போரைத் தொடங்கி மூன்று மாதங்களுக்கும் மேலாகியும், இந்த பிராந்தியம் எவ்வளவு ஆபத்தான முறையில் ஸ்திரத்தன்மையற்றுள்ளது என்பதை இது காட்டுகின்றது.

இது, போரின் தற்போதைய போக்கைப் பற்றிய மூன்று புள்ளிகளையும் எடுத்துக் காட்டுகின்றது. (ஏ-இ)



# வெடித்துச் சிதறியது அமெ. ஹெலிகொப்டர்

தெஹ்ரான், ஜூன் 11

**ஹோர்மூஸ் நீரிணை பகுதியில் கண்காணிப்புப் பணியில் ஈடுபட்டிருந்த அமெரிக்கப் பாதுகாப்புப் படையின் ஹெலிக்கொப்டரொன்று வெடித்துச் சிதறியுள்ளது.**

இந்த வெடிப்புச் சம்பவமானது, நேற்றுமுன்தினம் இடம்பெற்றுள்ளது என்று நியூயோர்க் டைம்ஸ் நிறுவனம்செய்திவெளியிட்டுள்ளது.

இந்த விபத்து ஈரான் படைகளின் தாக்குதலால் நடந்ததா அல்லது தொழில்நுட்பக் கோளாறு காரணமாக ஏற்பட்டதா என்பது இன்னும் தெளிவாகத் தெரியவில்லை எனவும், இது தொடர்பான ஆய்வு அறிக்கை பின்னர் வெளியிடப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஈரான், அமெரிக்கா மற்றும் இஸ்ரேல் ஆகிய நாடுகளுக்கு இடையே கடந்த பெப்ரவரி 28ஆம் திகதி தொடங்கிய போர், பேச்சுவார்த்தைகளில் தீர்வு கிடைக்காததால் தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டாலும் ஆங்காங்கே தாக்குதல்கள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன. ஹோர்மூஸ் நீரிணை வழியாகப் பிறநாட்டுக் கப்பல்கள் செல்வதற்கு ஈரான் தொடர்ந்து அச்சுறுத்தல் விடுத்து வருவதால், அமெரிக்கப் படைகள் அங்கு தீவிர கண்காணிப்பில் ஈடுபட்டு வருகின்றன.

இந்த விபத்தில், ஹெலிகொப்டரில் இருந்த இரண்டு விமானிகளும் காயமின்றி உயிருடன் மீட்கப்பட்டுள்ளதாக அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் உறுதிப்படுத்தியுள்ளார். (ஏ-இ)

# இஸ்ரேல் நிதி அமைச்சர் பிரான்ஸ் நுழையத்தடை

பரிஸ், ஜூன் 11

இஸ்ரேலிய நிதி அமைச்சர் பெசலெல் ஸ்மோட்ரிச்சுக்கு நாட்டிற்குள் நுழைய தடை விதித்துள்ளது என்று பிரான்ஸ் அரசு அறிவித்துள்ளது.

பிரெஞ்சு வெளியுறவு அமைச்சர் ஜீன் நோயல் பாரோட் இதைத் தெரிவித்ததுடன், மேலும் நான்கு குடியேற்றத் தலைவர்கள் மற்றும் 21 குடியேறிகளுக்கும் நுழைவுத் தடைவிதிக்கப்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ஏ-இ)



# ஈரான் மீது அமெரிக்கா சரமாரித் தாக்குதல்

லண்டன், ஜூன் 11

ஈரானின் வான் பாதுகாப்பு அமைப்புகள் மற்றும் ரேடார் தளங்களைக் குறிவைத்து அமெரிக்கப் படைகள் ஏவுகணைத் தாக்குதலை நடத்தியுள்ளதாக அமெரிக்க மத்திய கட்டளை பிரிவு தெரிவித்துள்ளது.

அமெரிக்க இராணுவத்தின் அப்பாச்சி ஹெலிகாப்டர் சுட்டு வீழ்த்தப்பட்டதற்குப் பதிலடியாக, ஈரான் மீது அமெரிக்கா நேற்றுத் தாக்குதல் நடத்தியுள்ளது.

ஈரானின் மிக முக்கியமான துறைமுக நகரான பண்டார் அப்பாஸ் மீது அமெரிக்கா ஏவுகணைகளை வீசியுள்ளது. மேலும் ஈரானின் கடற்படைத் தளங்கள் அமைந்துள்ள கெஷ்ம் தீவிலும் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

ஏமன் கடற்பரப்பில் ஹார்மூஸ் ஜலசந்தி அருகே கண்காணிப்பில் ஈடுபட்டிருந்த அமெரிக்க இராணுவ ஹெலிகொப்டர் கடலில் நேற்று விழுந்தது. ஈரான் தான் தங்கள் ஹெலிகொப்டரை சுட்டு வீழ்த்தியது என அமெரிக்க அதிபர் டிரம்ப் குற்றம்சாட்டினார்.

இந்த நிலையில் ஈரானின் வான் பாதுகாப்பு அமைப்புகள் மற்றும் ரேடார் தளங்களை குறிவைத்து அமெரிக்கப் படைகள் ஏவுகணைத் தாக்குதலை நடத்தியுள்ளது. (ச-இ)



# லெபனான் மீது இஸ்ரேல் தாக்குதல்

லண்டன், ஜூன் 11

தெற்கு லெபனானின் முக்கியமான நகரங்கள் மற்றும் மக்கள் வசிக்கும் குடியிருப்புப் பகுதிகளைக் குறிவைத்து இஸ்ரேல் இந்தத் தாக்குதலை நடத்தியுள்ளது. நபாத்தியா நகரில் இஸ்ரேல் நடத்திய டிரோன் தாக்குதலில் பல கட்டிடங்கள் கடுமையாக சேதமடைந்தன. இதுதவிர, கபர்சிர் நகரிலும் இஸ்ரேல் தாக்குதல் நடத்தியுள்ளது.

மேலும் டயர் மாகாணத்தில் உள்ள அல் அப்பாசியா மற்றும் அல் ரமாதியா ஆகிய பகுதிகள் மீதும் இஸ்ரேல் குண்டுவீசியுள்ளது. இந்த வெவ்வேறு தாக்குதல்களில் லெபனானில் 14 பேர் கொல்லப்பட்டுள்ளனர். சேதம் அதிகமுள்ளதால் உயிரிழப்புகள் மேலும் அதிகரிக்கும் என அஞ்சப்படுகிறது. (ச.)

# பாரசீக வளைகுடாவை விட்டு அமெரிக்கா வெளியேறுக

## ஈரான் எச்சரிக்கை



லண்டன், ஜூன் 11

பாரசீக வளைகுடா பிராந்தியத்தை விட்டு அமெரிக்கா வெளியேற வேண்டும் என்று ஈரான் வெளியுறவு அமைச்சர் அப்பாஸ் அராக்சி எச்சரிக்கை விடுத்துள்ளார்.

அமெரிக்க இராணுவத்தின் அப்பாச்சி ஹெலிகாப்டர் சுட்டு வீழ்த்தப்பட்டதைத் தொடர்ந்து, போர்ப்பதற்றம் அதிகரித்து வருகிறது.

இந்நிலையில், போர்க்களத்தில் தோல்விகளைச் சந்தித்த போதிலும், ஈரானின் உறுதிநிலைபாடுகளை அமெரிக்கா மேலும் சோதிக்க நினைக்கிறது.

வரலாற்றில் இதற்கு முந்தைய காலக்கட்டங்களில் பாரசீக வளைகுடாவில் ஊடுருவும் வெளியாட்கள் கடுமையான விளைவுகளைச் சந்தித்துள்ளனர்.

அமெரிக்காவின் எந்தவொரு தாக்குதலுக்கும் அச்சுறுத்தலுக்கும் ஈரானின் ஆயுதப் படைகள் பதிலடி கொடுக்கவல்லது.

அமெரிக்கா பாதுகாப்பாக இருக்க விரும்பினால் ஈரான் பகுதியை விட்டு வெளியேற வேண்டும் என்றும் ஈரான் வெளியுறவு அமைச்சர் தனது எக்ஸ் தள பதிவில் எச்சரிக்கை விடுத்துள்ளார். (ச-இ)

# பிலிப்பைன்ஸ் நிலநடுக்கம் சாவு எண்ணிக்கை அதிகரிப்பு

லண்டன், ஜூன் 11

பிலிப்பைன்ஸின் மிண்டானோ தீவுக்கு அருகே 33 கிலோமீட்டர் ஆழத்தில் ஏற்பட்ட 7.8 ரிச்டர் அளவிலான சக்திவாய்ந்த நிலநடுக்கத்தால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 37 ஆக உயர்ந்துள்ளது. 500க்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. நிலநடுக்கத்தை அடுத்து சுமார் 20 ஆயிரத்துக்கும் அதிகமான மக்கள் பாதுகாப்பு கருதி இடம்பெயர்ந்து அவசரகால முகாம்களில் தங்கவைக்கப்பட்டுள்ளனர். கடலில் 1.4 மீற்றர் உயரம் வரை சுனாமி அலைகள் பதிவானதால் கடலோரப் பகுதிகளில் அச்ச நிலை ஏற்பட்டுள்ளது.

சுமார் 2,000 வீடுகள், 117 அரசு கட்டிடங்கள் மற்றும் பல அடுக்குமாடிக் குடியிருப்புகள் சேதமடைந்துள்ளன. மேலும், ஜெனரல் சான்டோஸ் விமான நிலையம் மூடப்பட்டு, மனிதாபிமான உதவி விமானங்கள் மட்டுமே இயக்கப்படுகின்றன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஏ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# குருப்பெயர்ச்சி பலன்கள் 2026



ஆண்டுக்கு ஒருமுறை பெயர்ச்சி அடையக்கூடிய குரு பகவான் இந்தப் பராபவ வருடத்தில், வாக்கியப் பஞ்சாங்கத்தின்படி 26.05.2026 அன்று பகல் 11 மணிக்கு மிதுனம் ராசியில் இருந்து தனது உச்ச ராசியான கடகத்துக்குப் பெயர்ச்சியாகின்றார். திருக்கணித பஞ்சாங்கத்தின் படி ஜூன் 2 ஆம் திகதி பெயர்ச்சி நடக்கின்றது என்று ஜோதிடர்கள் தெரிவிக்கின்றனர். குருவின் இந்த நகர்வால் அதிர்ஷ்டமான மற்றும் கவனமுடன் இருக்கவேண்டிய ராசியினர் யார்?, அவர்களுக்கான ஒருவருட பலன்கள் என்ன என்பதை இங்கு பார்ப்போம்.




**சொந்தக்காரனை நம்பினால் தகராறு, சொந்தக் காலை நம்பினால் வரலாறு என்ற வரிகளுக்கு ஏற்ப தன் உழைப்பே மூலதனம் என்று வாழும் மகர ராசிக்காரர்களே!**

குருபகவான், ஜூன் 2 முதல் உங்கள் ராசிக்கு 7ஆம் இடத்தில் வந்து அமர்ந்து பலன் தரப்போகிறார். இதுவரை 6ஆம் இடத்தில் மறைந்து பல்வேறு பிரச்சினைகளையும், எதிர்ப்புகளையும்தந்த குருபகவான் இனி உங்களுக்கு எல்லாவகையிலும் நன்மையைச் செய்வார். 7இல் குரு வந்து அமர்வதால், உங்களின் பேச்சுக்கு மதிப்பு, மரியாதை கூடும்.

வெளி வட்டாரத்தில் செல்வாக்கு அதிகரிக்கும். கணவன்-மனைவிக்குள் இருந்துவந்த மனக்கசப்புகள் விலகும். மனம் விட்டுப்பேசுவீர்கள். உங்களின் அறிவுரையை எல்லோரும் ஏற்றுக்கொள்வார்கள். தடைபட்டிருந்த சுப காரியங்கள் இனி நல்லபடியாக நடக்கும். வீடு கட்ட வங்கிக்கடனுதவி கிடைக்கும். பூர்வீகச் சொத்துப் பிரச்சினைகள் தீரும். இழந்த பதவியை மீண்டும் பெறுவீர்கள்.

**குருபகவானின் பார்வைப் பலன்கள்:**
குருபகவான் உங்கள் ராசியைப் பார்ப்பதால், மனதிலிருந்த குழப்பங்கள் நீங்கி தெளிவான முடிவுகளை எடுப்பீர்கள். அழகு, இளமை கூடும். உடல் ஆரோக்கியம் சீராகும். பணப்புழக்கம் சரளமாக இருக்கும். எதிலும் துல்லியமாகத் திட்டமிட்டு வெற்றி பெறுவீர்கள். புது வீடு வாங்குவீர்கள். பழைய நண்பர்கள், உறவினர்களால் ஆதாயமுண்டு. பழைய வாகனத்தை மாற்றுவீர்கள்.

குருபகவான் உங்கள் ராசிக்கு 3ஆம் இடத்தைப் பார்ப்பதால், கௌரவப் பதவிகள் தேடி வரும். தாழ்வு மனப்பான்மையில் இருந்து விடுபடுவீர்கள். சொந்த ஊரில் முதல் மரியாதை கிடைக்கும். உங்களால் பயனடைந்தவர்கள், இப்போது உங்களுக்கு உதவுவார்கள். வீண்பழிகள் விலகும். பழைய கடனிலிருந்து விடுபடுவீர்கள்.

குருபகவான் உங்கள் ராசிக்கு 11ஆம் இடமாகிய லாபஸ்தானத்தைப் பார்ப்பதால், சமூகத்தில் உங்களின் அந்தஸ்து உயரும். கேட்ட இடத்தில் உதவிகள் கிடைக்கும். விலையுயர்ந்த தங்க ஆபரணம் வாங்குவீர்கள். மூத்த சகோதரரால் ஆதாயமுண்டு. ஷேர் மூலம் பணம் வரும். வெளிநாட்டில் இருப்பவர்கள் உதவுவார்கள்.

> உத்தியோகத்தில், புதிய பொறுப்புகள் தேடி வரும். எங்கும் எதிலும் முன்னேற்றம் கிட்டும் காலமாக அமையும்.

**குருபகவானின் நட்சத்திர சஞ்சாரம்:**
உங்களின் தைரிய விரயாதிபதியுமான குருபகவான் தனது நட்சத்திரத்தில் 02.06.26 முதல் 18.06.26 வரை பயணம் செய்வதால் தன்னம்பிக்கை அதிகரிக்கும். புது முயற்சிகளில் வெற்றி உண்டு. சிலர் இருக்கும் வீட்டை விரிவுபடுத்திக் கட்டுவார்கள்.

உங்களின் ராசிநாதனும், தனாதிபதியுமான சனிபகவானின் நட்சத்திரத்தில் 18.06.26 முதல் 19.08.26 வரை குருபகவான் பயணம் செய்வதால் அழகு, ஆரோக்கியம் கூடும். கொடுத்து ஏமாந்த பணம் இப்போது கைக்கு வரும். பிரிந்த தம்பதி ஒன்றுசேருவார்கள். மகளுக்கு திருமணம் கூடிவரும். பூர்வீகத்தில் சொத்து வாங்குவீர்கள்.

**வியாபாரம், உத்தியோகம்:**
வியாபாரத்தில்போட்டிகளைசமாளித்து இலாபமடைவீர்கள். உங்களின் தனித்தன்மை வெளிப்படும். பழைய பாக்கிகள் வசூலாகும். புது வாடிக்கையாளர்கள் தேடி வருவார்கள். வியாபாரத்தை விரிவுபடுத்த வங்கிக் கடனுதவி கிடைக்கும். அனுபவமிக்க வேலையாட்களை பணியில் அமர்த்துவீர்கள். உணவு, ஏற்றுமதி இறக்குமதி, துணி வகைகளால் லாபம் அடைவீர்கள். கூட்டுத்தொழிலில் பிரச்சினைகள் ஓயும். பங்குதாரர்கள் ஆதரவு தருவார்கள். அரசிடமிருந்து சலுகைகள் கிடைக்கும்.

உத்தியோகத்தில், புதிய பொறுப்புகள் தேடி வரும். வேலைச்சுமை குறையும். மேலதிகாரியின் வீட்டு விசேஷங்களில் கலந்துகொள்ளும் அளவுக்கு, நெருக்கமாவீர்கள். நீங்கள் எதிர்பார்த்த பதவி, சம்பள உயர்வு கிடைக்கும். கணினித்துறையினருக்கு அதிக சம்பளத்துடன் வெளிநாட்டில் வேலை கிடைக்கும். இழந்த சலுகையை மீண்டும் பெறுவார்கள். கலைஞர்களுக்கு பெரிய நிறுவனத்தில் வாய்ப்புக் கிடைக்கும். அரசால் கவுரவிக்கப்படுவீர்கள். இந்தக் குருப்பெயர்ச்சி எங்கும் எதிலும் முன்னேற்றம் கிட்டும் காலமாக அமையும்.

# 'டித்வா' வால் பாதிக்கப்பட்ட லயன் வீடுகளுக்கு இழப்பீடு!



கொழும்பு, ஜூன் 11
'டித்வா' புயலால் முழுமையாகப் பாதிக்கப்பட்ட மலையக பெருந்தோட்டப் பகுதி லயன் வீடுகளுக்கும் 50 இலட்சம் ரூபா இழப்பீடு வழங்கப்படும் என்று பெருந்தோட்ட சமூக உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சர் சமந்த வித்யாரத்ன தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றில் அவர் மேலும் தெரிவிக்கையில்,
முழுமையாகச் சேதமடைந்த லயன் வீடுகளின் மொத்த எண்ணிக்கை 431 ஆகும். பகுதியளவு சேதமடைந்த லயன் வீடுகளின் மொத்த எண்ணிக்கை - 2 ஆயிரத்து 152 ஆகும்.
முழுமையாகச் சேதமடைந்த லயன் வீடுகளுக்கும் 50 இலட்சம் ரூபா இழப்பீடும், 10 பேர்ச்சஸ் காணியும் வழங்கப்படும். இதுதொடர்பில் அமைச்சரவை தீர்மானம் எடுத்துள்ளது.
பகுதியளவு சேதமடைந்த வீடுகளுக்கு இழப்பீட்டு மதிப்பீட்டுக்கமைய கொடுப்பனவு வழங்கப்படும்.
பகுதியளவு சேதமடைந்த லயன் அறைகளில் வாழமுடியாத சூழல் இருந்தால் அதற்கும் 50 இலட்சம் ரூபா வழங்கப்படும் - என்றார். (ச-44)

# யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் சர்வதேச தமிழிசை ஆய்வு மாநாடு

யாழ்ப்பாணம், ஜூன் 11
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் முதலாவது சர்வதேச தமிழிசை ஆய்வு மாநாடு நாளை வெள்ளிக்கிழமை யாழ்ப்பாணம் பல்கலைக்கழக கைலாசபதி அரங்கில் நடைபெறவுள்ளது என்று யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் இசைத் துறையின் தலைவர் கலாநிதி சூரியகுமார் தெரிவித்துள்ளார்.
யாழ். பல்கலைக்கழக காண்பிய ஆற்றுகைக் கலைகள் பீடத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனை தெரிவித்தார்.
எமது இசைத்துறைப் பீடம் 60 ஆண்டுகளுக்கும் மேலான பாரம்பரியத்தைக் கொண்டது. அந்தவகையில் இசைத்துறையின் வரலாற்றில் ஒரு மைல் கல்லான முதலாவது சர்வதேச தமிழிசை ஆய்வு மாநாடு நடத்தப்படவுள்ளது.
நாளை வெள்ளிக்கிழமை 12.06.2026 அன்று யாழ்ப்பாணம் பல்கலைக்கழக கைலாசபதி அரங்கில் காலை 9 மணியளவில் ஆய்வு மாநாட்டின் நிகழ்வுகள் ஆரம்பமாகும். 13.06.2026 மாலை 4 மணிக்கு எமது பீடம் சார்ந்து கலை நிகழ்வுகள் நடைபெறவுள்ளன. கந்தையா கார்த்திகேசு நிதியத்தின் நிதிப் பங்களிப்புடன் இந்த ஆய்வு மாநாடு நடைபெறவுள்ளது. இதில் அனைவரும் பங்கெடுக்களவேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ச-27)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media



# யாழ். பல்கலைக்கழகத்தில் நவீன லிப்ட் வசதி அறிமுகம்

யாழ்ப்பாணம், ஜூன் 11
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் இரசாயனவியல் துறையில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட நவீன லிப்ட் நேற்றுமுன்தினம் திறந்துவைக்கப்பட்டது.
இந்த நவீன லிப்ட் வசதி, குறிப்பாகப் பல்கலைக்கழகத்தில் கல்வி கற்கும் மாற்றுத்திறனாளி மாணவர்கள் மற்றும் சக்கர நாற்காலியைப் பயன்படுத்தும் மாணவர்களின் தேவைகளைக் கருத்திற்கொண்டு வடிவமைக்கப்பட்டுள்ளது.
இதன் மூலம் அவர்கள் மேல் தளங்களிலுள்ள விரிவுரை மண்டபங்கள் மற்றும் ஆய்வகங்களுக்குச் செல்வதில் எதிர்கொண்டுவந்த அனுகல்சவால்கள் குறையும் என எதிர்பார்க்கப்படுகிறது. நிகழ்வில் மூத்த பேராசிரியர் பு. ரவிராஜன், விஞ்ஞானபீட பீடாதிபதியும் கணினி விஞ்ஞானத்துறையின் சிரேஷ்ட விரிவுரையாளருமான கலாநிதி கே. தபோதரன் மற்றும் இரசாயனவியல் துறையின் தலைவர் பேராசிரியர் திருமதி ஜே. பிரபாகரன் ஆகியோர் இணைந்து லிப்டைத் திறந்து வைத்தனர். (ச)

## மரண அறிவித்தல்

பிறப்பு 27 . 02 . 1933



இறப்பு 10 . 06 . 2026

(CS/61624) J-1


### பொன்னம்பலம் சிவப்பிரகாசம்

கொழும்புத்துறையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னம்பலம் சிவப்பிரகாசம் அவர்கள் நேற்று (10.06.2026) புதன்கிழமை காலமானார்.
அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னம்பலம் - சிவானந்தம் தம்பதியரின் சிரேஷ்ட புதல்வனும், காலஞ்சென்றவர்களான சபாநாதன் - இராசம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், சரஸ்வதியின் பாசமிகு கணவரும் சசிதரன் (கனடா), வாசுகி (ஆசிரியை – புனித பத்திரிசியார் கல்லூரி) ஆகியோரின் அன்புத் தந்தையும், சிவலோகநாதன், காலஞ்சென்றவர்களான இராஜேஸ்வரி, பத்மாவதி, மோகனதாஸ், திருநாவுக்கரசு ஆகியோரின் அன்புச் சகோதரனும், உமா (கனடா), அரவிந்தன் (ஆசிரியர் - ஏஞ்சல் சர்வதேசப் பாடசாலை) ஆகியோரின் அன்பு மாமனாரும், திவ்யா - ஆருஷன், சுஜீவன், அனந்தன் ஆகியோரின் பாசமிகு பேரனும், மயிலன், மாயாவின் அன்புப் பூட்டனுமாவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11.06.2026) வியாழக்கிழமை இல.03, விபுலானந்தர் வீதி, கொழும்புத்துறையிலுள்ள இல்லத்தில் நண்பகல் 12.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக துண்டி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.
இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்: குடும்பத்தினர்**
**இல.03, விபுலானந்தர் வீதி,**
**கொழும்புத்துறை.**

## மரண அறிவித்தல்

தோற்றம் 14 . 05 . 1954



மறைவு 10 . 06 . 2026

### வைத்திலிங்கம் சின்னத்துரை (குஞ்சு)


கூழாவடி கிழக்கு ஆனைக்கோட்டையைப் பிறப்பிடமாகவும் சிறுப்பிட்டி வடக்கு நீர்வேலியை வசிப்பிடமாகவும் கொண்ட வைத்திலிங்கம் சின்னத்துரை (குஞ்சு) அவர்கள் நேற்று (10.06.2026) புதன்கிழமை காலமானார்.
அன்னார் காலஞ்சென்ற வைத்திலிங்கம் - சேதுப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற தம்பையா - இளையகுட்டி தம்பதியரின் மருமகனும், இந்திராணியின் அன்புக் கணவரும், தர்மகுலசிங்கம், சற்குணம், விஜயரத்தினம், கைலநாதன், கமலாதேவி (அமரர்), வீரலட்சுமி ஆகியோரின் அன்புச் சகோதரனும், ரேஜிதா (இலண்டன்), லோகிதன் (சாரதி - லக்கிலான்ட் நிறுவனம்), கஜனி (பணியாளர், மதி கலர்ஸ் பிரிண்டேர்ஸ்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், நித்தியாபரன் (லண்டன்) அவர்களின் மாமனாரும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11.06.2026) வியாழக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, தகனக்கிரியைகள் கிந்துசிட்டி இந்து மயானத்தில் நடைபெறும்.
இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(CS 31966)A

**ஞானவைரவர் வீதி,**
**சிறுப்பிட்டி வடக்கு,**
**நீர்வேலி.**

**தகவல்:**
**குடும்பத்தினர்**
**076 [illegible]**

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



பிறப்பு
15.05.1951

இறப்பு
23.05.2025

### அமரர் வல்லிபுரம் தங்கராசா

(நாச்சிமார் அம்மன் வீரபத்திரர் ஆலய முன்னைநாள் தலைவர் மற்றும் அனுசன் மரக்காலை உரிமையாளர்)

யாழ். கரும்பிடை, சமரபாகு, வல்வெட்டித்துறையைப் பிறப்பிடமாகவும், வதிவிடமாகவும் கொண்டிருந்த வல்லிபுரம் தங்காராசா அவர்களின் முதலாம் ஆண்டு நினைவஞ்சலி.
அன்னார் விமலாதேவியின் கணவரும், முகுந்தினி, றஜனிகா, றஜிதா, அச்சுதன், அரவிந்தன், அனுசன், சொர்ணன் ஆகியோரின் அன்புத் தந்தையும், புஷ்பநாதன், சுதாகர், நிரஞ்சன், கிரிசா, ஜெலிதா, ஆகியோரின் மாமனாரும், சொப்பணன், சந்திசா, நதுஷா, பாவணன், சுஜாத், மாகாபிரித்தி, சுஜாத்தான, விபூசன், பிரீத்தி, ஜெவினா, அஜின், விகான், அக்ஷிதா, அஷ்விக், அஜீஸ் ஆகியோரின் பேரனும் ஆவார்.

ஆண்டு ஒன்று போனாலும் அழியவில்லை உங்கள் நினைவு
அன்பின் உறைவிடமாகவும் பாசத்தின் சிகரமாகவும் வாழ்ந்த
எம் அன்புத் தெய்வமே

நீங்கள் வாழ்ந்த இவ்வுலகில் எமை வாழவைக்க ஓயாதுழைத்து
இப்போ ஓய்வெடுத்துக் கொண்டீர்களே

உங்கள் ஈடில்லா பாசத்திற்கு எங்கள் கண்ணீர் இணையாகுமா?
உருண்டு புரண்டு அழுகிறோம் உங்கள் செவிக்கு கேக்கவில்லையா?

ஓராண்டு அல்ல எத்தனை ஆண்டுகள் ஓடி மறைந்தாலும்
எங்கள் நெஞ்சிருக்கும் வரை உங்கள் நினைவிருக்கும்

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்...

**குடும்பத்தினர்.**

(CS 34065)A

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

BCAS INTERNATIONAL UNIVERSITY PLACEMENTS

UniWorld

# YOUR GLOBAL EDUCATION JOURNEY STARTS HERE

Explore. Learn. Grow. Succeed.

UK | CANADA | AUSTRALIA | FRANCE | GERMANY

- Meet university representatives
- Exclusive scholarships
- FREE visa guidance
- Pathway programs
- Student loans and easy payment plans
- IELTS guidance

CALL TO REGISTER 077 769 8062

MEET UNIVERSITIES | EXPLORE PROGRAMS | APPLY ON THE SPOT

13 JUNE 2026 | 09 AM - 4 PM | JETWING JAFFNA, 37, Mahatma Gandhi Road, Jaffna | FREE ENTRY

## துயர் பகிர்கின்றோம்

எமது கல்லூரியின் ஆசிரியர்
திருமதி வாசுகி அரவிந்தன் அவர்களின் அன்புத் தந்தை
**அமரர் பொன்னம்பலம் சிவப்பிரகாசம்**
அவர்களின் பிரிவுச் செய்தி கேட்டு மிகுந்த மனவேதனை அடைகின்றோம். அன்னாரின் குடும்ப அங்கத்தவர்களுக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆன்மா இறைவனில் இளைப்பாற்றியடையப் பிரார்த்திக்கின்றோம்.

**புனித பத்திரிசியார் கல்லூரி**
**யாழ்ப்பாணம்.**

## கண்ணீர் அஞ்சலி

எமது கல்லூரியின் ஆசிரியர் திருமதி வாசுகி அரவிந்தன் அவர்களின்
அன்புத் தந்தை
அமரர் **பொன்னம்பலம் சிவப்பிரகாசம்** அவர்களின்
பிரிவுச் செய்தி கேட்டு மிகுந்த மனவேதனை
அடைகின்றோம்.
அன்னாரின் குடும்ப அங்கத்தவர்களுக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை
தெரிவிப்பதுடன். அன்னாரின்
ஆத்மா இறைவனில் சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

ஆசிரியர் சங்கம்
புனித பத்திரிசியார் கல்லூரி யாழ்ப்பாணம்.

## அறிவித்தல்
## கரைதுறைப்பற்று பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் முல்லைத்தீவு (வ/து)

சங்கத்தின் 31.12.2024ல் முடிவடைந்த நிதியாண்டிற்கான கணக்காய்வு நடைபெற்று வருவதனால் சங்கத்துடன் கொடுக்கல், வாங்கல் மேற்கொண்டவர்கள் தமது வருமதி, சென்மதிகளை உறுதிப்படுத்துவதுடன் சங்கத்தின் கிராமிய வங்கியில் கணக்குகளை பேணும் அங்கத்தவர்கள் மற்றும் வாடிக்கையாளர்கள் தமது கடன் மற்றும் சேமிப்பு கணக்கு மீதிகள் தொடர்பான உறுதிப்படுத்தல்களை மேற்கொள்ள வேண்டியிருப்பதால் தங்களிடம் உள்ள சம்பந்தப்பட்ட ஆவணங்களை 15.06.2026ம் திகதி தொடக்கம் 18.06.2026ம் திகதி வரை அலுவலக நேரத்தில் சங்கத்தில் சமர்ப்பித்து உறுதிப்படுத்தல்களை மேற்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

**செயலாளர்**
**கரைதுறைப்பற்று ப.நோ.கூ.சங்கம்**
**முல்லைத்தீவு**

(CR/47659) J-1

## மாபிள் வேலை

உங்கள் வீடுகளிற்கு தரமான முறையில் அழகாக
மாபிள் பதித்து தரப்படும்.
ஒரு சதுர அடி - 85.00 ரூபாய்.
நிலம் இழுத்து பதிக்க - 120 ரூபாய்
(CR/61520) J-1
**077 334 1281**

## நாஹா மருத்துவ நிலையம்

பாரிசவாதம் - திடீர் கை, கால் செயலிழப்பும்
தீராத முள்ளந்தண்டு பாதிப்பு, முழங்கால் வீக்கம்,
மாறாத தலைச்சுற்றல், அல்சர், நீரழிவால் வரும்
கால் பாத எரிச்சல், மதத்துப்போதல்
- சிறப்புமருந்தியல்

T.P.: 077 321 2740
வங்கி முன்லேன் சாத்தாவத்தை வயிரவர்
கோயிலடி (ஜெகபதிவீடு) மானிப்பாய்.

# வடக்கு மாகாண கராத்தே போட்டி
# மகாஜன மாணவிக்கு 2 தங்கங்கள்!



*யாழ்ப்பாணம், ஜூன் 11*

வடக்கு மாகாணப் பாடசாலைகளுக்கிடையிலான கராத்தே போட்டியில் யாழ். தெல்லிப்பழை மகாஜனக்கல்லூரியைச் சேர்ந்த மாணவி ஐ.மிஷாஜினி ஒட்டுமொத்தப் பெண்கள்பிரிவில் சிறந்த வீராங்கனை யாகத் தெரிவுசெய்யப்பட்டுச் சாதனை படைத்துள்ளார்.

அளவெட்டி அருணோதயக் கல்லூரியில் கடந்த திங்கட்கிழமை இந்தப் போட்டிகள் நடைபெற்றன. இந்தப் போட்டியில் 20 வயதுப் பெண்கள் பிரிவில் தெல்லிப்பழை மகாஜனக்கல்லூரி சார்பாக ஐ.மிஷாஜினி பங்குபற்றி கட்டா, குமுத்தே ஆகிய இரு பிரிவுகளிலும் முதலிடத்தைப் பெற்று தங்கப் பதக்கங்களை வென்றுள்ளார்.

(ச-66)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# ‘எல் நினோ’ தாக்கத்தை எதிர்கொள்ள நடவடிக்கை

வர்த்தக அமைச்சர் தெரிவிப்பு

கொழும்பு, ஜூன் 11

எல்நினோ நிலைமையை எவ்வாறு எதிர்கொள்வது என்பது தொடர்பான திட்டங்களைத் தயாரிக்க நடவடிக்கை எடுக்குமாறு துறைசார் அதிகாரிகளுக்கு வர்த்தக, வாணிப, உணவுப் பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சர் வசந்த சமரசிங்க தெரிவித்துள்ளார்.

எதிர்காலத்தில் உலகளவில் ஏற்படக்கூடிய எல்நினோ கால நிலை மாற்றத்தினால் இலங்கைக்கு ஏற்படக்கூடிய பாதிப்புகளை எதிர்கொள்வது மற்றும் அதற்கான முன்னாயுத்த நடவடிக்கைகள் குறித்த உணவுக்கொள்கை மற்றும் பாதுகாப்புக் குழுவின் விசேட கூட்டம் அண்மையில் நடைபெற்றது.

இதன்போது எல் நினோ நிலைமையினால் நாட்டின் விவசாயத்துறைக்கு ஏற்படக்கூடிய சவால்கள் குறித்து விசேட கவனம் செலுத்தப்பட்டது.

கூட்டத்தில் உரையாற்றிய வர்த்தக அமைச்சர்,


எல் நினோ நிலைமையை எவ்வாறு எதிர்கொள்வது என்பது தொடர்பான திட்டங்களைத் தயாரித்து கமத்தொழில் அமைச்சு, கமத்தொழில் திணைக்களம், மகாவலி அதிகாரசபை, நீர்ப்பாசனத் திணைக்களம் உள்ளிட்ட துறைசார் நிறுவனங்களுக்கு சமர்ப்பிக்கவேண்டும்.

இயற்கை அனர்த்தங்களை முன்கூட்டியே கணிக்கமுடியாது என்பதால், எந்தவொரு சூழ்நிலைக்கும் முகம்கொடுப்பதற்காக முன்கூட்டியே திட்டங்களை வகுக்கவேண்டும்.

கடந்த காலங்களில் டித்வா சூறாவளி மற்றும் மத்திய கிழக்கு யுத்த நிலைமைகளுக்கு மத்தியில் ஏற்பட்ட சவால்களுக்கு வெற்றிகரமாக முகம்கொடுத்ததைப் போன்று, வெளிப்புற சவாலான இந்த உலகளாவிய நிலைமையை கையாள்வதற்கான திட்டங்கள் காணப்படுவதாகவும், அது குறித்து அரசாங்கம் விசேட கவனம் செலுத்தியுள்ளது - என்றும் அவர் தெரிவித்தார்.

(ச-இ)

# மாற்றுத்திறனாளிகளுக்கான மாவட்டமட்டத் தடகளப் போட்டி!



யாழ்ப்பாணம், ஜூன் 11

யாழ்.மாவட்டச் செயலகமும், சமூக சேவைகள் திணைக்களமும் இணைந்து நடத்திய மாற்றுத்திறனாளிகளுக்கான மாவட்டமட்டத் தடகள விளையாட்டுப் போட்டி நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்தில் யாழ்.மாவட்டச் செயலர் மருதலிங்கம் பிரதீபன் தலைமையில் இடம்பெற்றது. நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின் ஓய்வுநிலை விரிவுரையாளரும், சுன்னாகம் வாழ்வகம் விழிப்புலன் வலுவிழந்தோர் இல்லத் தலைவருமான ஆறுமுகம் ரவீந்திரன் பங்கேற்றார்.

யாழ்.மாவட்ட மாற்றுத் திறனாளிகளின் திறன்களை மேம்படுத்தும் வகையில் ஏற்பாடு செய்யப்பட்ட குறித்த தடகள விளையாட்டுப் போட்டியில் யாழ்.மாவட்டத்தின் பிரதேச செயலக ரீதியான அணிகள் பங்குபற்றின. இறுதியாகப் பரிசளிப்பு நிகழ்வும் நடந்தது.

(ச-66)


# வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபை
# கேள்வி அறிவித்தல் 2026

பேயாடிகூழாங்குளம் வாகன சுத்திகரிப்பு நிலையம் மற்றும் அதனுடனான கடைகள்-04, சிற்றுண்டி நிலையம்

1. வவுனியா தெற்கு தமிழ் பிரதேசசபை எல்லைக்குள் அமைந்துள்ள பேயாடிகூழாங்குளம் வாகன சுத்திகரிப்பு நிலையம் மற்றும் அதனுடனான கடைகள்- 04 மற்றும் சிற்றுண்டிச்சாலை போன்றவற்றை 2026ஆம் ஆண்டு ஆவணி மாதம் 01ஆம் திகதி தொடக்கம் 2029 ஆடி மாதம் 31ஆம் திகதி வரை நடாத்துவதற்கான கேள்விகள் 2026.06.26ஆம் திகதி பிற்பகல் 2.30 மணிவரை என்னால் ஏற்றுக்கொள்ளப்படும்.
2. கேள்விப்படிவத்தை கீழ்க்காட்டப்படும் கேள்வி வைப்புப்பணம் கேள்விப் பத்திரக் கட்டணம் ஆகியவைகளை செலுத்தி இவ்வலுவலகத்தில் 2026.06.26ஆம் திகதி பிற்பகல் 12.00 மணி வரை பெற்றுக்கொள்ளலாம். கேள்விப் படிவங்களில் ஒரு பிரதி "செயலாளர், வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபை, நேரியகுளம் வீதி, நெளுக்குளம், வவுனியா" என்ற முகவரிக்கும், ஒரு பிரதி "பி/உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பி/உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், பூங்கா வீதி, வவுனியா" என்ற முகவரிக்கும், பதிவுத்தபால் மூலம் அல்லது நேரடியாகக் கையளிக்கலாம். கடித உறையின் இடப்பக்க மேல் மூலையில் எதற்கான கேள்வி எனக் குறிப்பிடுதல் வேண்டும். குறிப்பிட்ட திகதிக்கு பின்னரோ நேரத்திற்குப் பின்னரோ கிடைக்கும் கேள்விகள் என்னால் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.
3. 2026.06.26ஆம் திகதி பிற்பகல் 02:30 மணிக்கு கேள்விகள் திறந்து பரிசீலனை செய்யப்படும். கேள்விகள் திறந்து பரிசீலனை செய்யப்படும் போது கேள்விதாரர் அல்லது அவரது எழுத்து மூல அதிகாரமளிக்கப்பட்டவர் சமுகமாக இருக்க அனுமதிக்கப்படும்.
4. கேள்விதாரர் இலங்கைப் பிரஜையாக இருக்க வேண்டும்.
5. கேள்விப்பத்திரம் விரும்புவோர் கோரிக்கைக்கடிதத்துடன் தமது ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்துவதற்காக தே.அ.அட்டை, செல்லுபடியான சாரதி அனுமதிப்பத்திரம் ஆகியவற்றில் ஏதாவது ஒன்றுடனும் அதன் பிரதியுடனும் சமுகமளித்தல் வேண்டும்.
6. வாடகைக்காலம் 2026ஆம் ஆண்டு ஆவணி மாதம் 1ஆம் திகதி தொடக்கம் 2029ஆம் ஆண்டு ஆடி மாதம் 31ஆம் திகதி வரையான காலப்பகுதியினை கொண்டதாக இருக்கும்.
7. மாதாந்த கட்டுப்பணங்களை மாதம் முடிந்து ஐந்து நாட்களுக்குள் சபைக்குச் செலுத்திப் பற்றுச்சீட்டினைப் பெற்றுக் கொள்ளல் வேண்டும். தவறின் தண்டப்பணம் அறவிடப்படும். இக்கால அவகாசத்திற்குள் மாத வாடகைப் பணத்தை செலுத்தத் தவறும் கேள்விதாரரின் வைப்புப்பணத்திலிருந்து வாடகையும் தண்டமும் அறவிடப்படும். அத்துடன் தெரிவு செய்யப்படும் கேள்விதாரர் கேள்வியினை ஏற்றுக்கொள்ளாதவிடத்து கேள்வித் தொகை மீளளிக்கப்படமாட்டாது என்பதுடன் அவரது பெயர் கேள்வி கோரும் தகுதியுடையவர்களின் நிரலிலிருந்து நீக்கப்படுவதுடன் கறுப்புப் பட்டியலிலும் சேர்த்துக் கொள்ளப்படும்.
8. கேள்வி அறிவித்தலுக்கும், நிபந்தனைகளுக்கும் அமைவாகவே கேள்விகளை அனுப்புதல் வேண்டும். கேள்விப் பத்திரத்தில் கொடுக்கப்படும் விபரங்கள் உண்மையாகவும் சரியானவையாகவும் இருப்பதுடன் இவைகளை அத்தாட்சிப்படுத்தும் பொறுப்பும் கேள்விதாரரைச் சார்ந்தது. கேள்விப்படிவங்களைப் பெற முன்பும் அதற்குப் பின்பும் நிபந்தனைக்குரிய அத்தாட்சியினை சமர்ப்பிப்பதற்கு ஆயத்தமாக இருப்பது அவசியமானது.

| | விடயம் | 2026 கேள்வி கோரப்பட்ட தொகை | கட்டட உடைவுப்பணம், இயந்திர தேய்மானம் | கேள்வி வைப்பு | கேள்வி படிவக்கட்டணம் |
|---|---|---|---|---|---|
| 1 | வாகன சுத்திகரிப்பு நிலையம், கடை - 01 | 64,000.00 | 768,000.00 | 25,000.00 | 2,500.00 |
| 2 | கடை-02 | 3,500.00 | 42,000.00 | 25,000.00 | 2,500.00 |
| 3 | கடை-03 | 3,500.00 | 42,000.00 | 25,000.00 | 2,500.00 |
| 4 | கடை-04 | 4,500.00 | 54,000.00 | 25,000.00 | 2,500.00 |
| 5 | சிற்றுண்டி நிலையம் | 2,900.00 | 34,800.00 | 25,000.00 | 2,500.00 |

9. இங்கு அறிவிக்கப்படும் நிபந்தனைகளுக்கு அமைவாகவும் ஒப்பந்த சரத்திற்கு அமைவாகவும் என்னால் காலத்திற்கு காலம் எழுத்து மூலம் விதிக்கப்படும் ஏனைய நிபந்தனைகளுக்கும் கட்டுப்படுதல் வேண்டும்.
10. யாதொரு காரணமும் காட்டாது கேள்வி முழுவதையுமோ அல்லது கேள்வியின் பகுதியையோ ஏற்கவோ நிராகரிக்கவோ கேள்விச்சபைக்கும் எனக்கும் உரிமையுண்டு.
11. வாடகைக்கு எடுத்தவர் உபவாடகைக்கு விடுவது தெரியப்படும் சந்தர்ப்பத்தில் வாடகை உரிமை இரத்துச் செய்யப்படும்.
12. வாடகைக்கு எடுத்தவரே அலுவலக தொடர்பாடல்களை ஏற்படுத்திக் கொள்ளல் வேண்டும்.
13. மேலே சொல்லப்பட்ட கேள்வி நிபந்தனைகள் அனைத்தையும் ஒப்புக்கொண்டே கேள்விகள் அனுப்புதல் வேண்டும்.
14. மேலதிக விபரங்களை அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் நேரடியாக சமுகமளித்து பெற்றுக்கொள்ளலாம்.

தவிசாளர்,
வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபை.

2026.06.10



# மரண அறிவித்தல்



தோற்றம்: 01.10.1955 மறைவு: 08.06.2026

## இளையதம்பி வேலாயுதபிள்ளை

வசாவிளானை பிறப்பிடமாகவும் அளவெட்டி, அம்பனையை வசிப்பிடமாகவும் கொண்ட இளையதம்பி வேலாயுதபிள்ளை அவர்கள் 08.06.2026 திங்கட்கிழமை காலை காலமானார்.

அன்னார் இளையதம்பி மீனாட்சி தம்பதியரின் மகனும், நாகேஸ்வரியின் அன்புக் கணவரும், தர்மினி (அமரர்), ஊர்மிளா, துஷியந்தன், பிகாஷ் ஆகியோரின் தந்தையும், மயூரன், பவித்திரா ஆகியோரின் மாமனாரும், நவீன், நதின் ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11.06.2026) வியாழக்கிழமை அம்பனையில் உள்ள இல்லத்தில் காலை 09.00 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக் காக வசாவிளான் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

கொல்லங்கலட்டி விதி, அம்மனை.

தகவல்: குடும்பத்தினர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாகாணசபைத்...

உறுப்பினர் ரவி கருணாநாயக்க எழுப்பிய கேள்விகளுக்கு பிரதமர் ஹரிணி தெரிவித்ததாவது:-

மாகாணசபைத் தேர்தல்கள் சட்டத்தின் பிரகாரம் நிச்சயம் நடக்கும். தேர்தலை ஒத்திவைக்கும் எந்தவொரு எண்ணமும் அரசாங்கத்துக்கு இல்லை. நாம் ஆட்சிக்கு வந்தபின்னர் இரண்டு தேர்தல்கள் நடத்தப்பட்டுள்ளன. மாகாணசபைத் தேர்தல் தொடர்பில் ஆராய்ந்து முடிவொன்றை எடுப்பதற்காக விசேட நாடாளுமன்றத் தெரிவுக்குழு அமைக்கப்பட்டுள்ளது. அமைச்சர் விஜித ஹேரத் தலைமையிலான அந்தக்குழு முன்வைக்கும் பரிந்துரைக்கமைய நாம் செயற்படுவோம் - என்றார். (அ-ம-இ)

## பேருந்துத்...

அனுப்பப்பட்ட நிலையில், சடலமாக மீட்கப்பட்டவர் யாரென இதுவரை பொலிஸார் உறுதிப்படுத்தவில்லை. இதையடுத்து அவரை அடையாளம் காண உதவுமாறு பொதுமக்களிடம் பொலிஸார் கோரிக்கை விடுத்துள்ளனர். (அ-ம-55-20+56)

## நயினை...

பட்டுள்ளது. நயினாதீவு நாகபூஷணி அம்மன் ஆலய வருடாந்த மஹோற்சவப் பெருவிழா எதிர்வரும் 15ஆம் திகதி திங்கட்கிழமை ஆரம்பமாகவுள்ளது. இதுதொடர்பான முன்னாயத்தக் கலந்துரையாடல் யாழ்ப்பாணம் மாவட்டச் செயலக கேட்போர் கூடத்தில் யாழ். மாவட்டச் செயலர் மருதலிங்கம் பிரதீபன் தலைமையில் நேற்றுப் புதன்கிழமை இடம்பெற்றது. இதன்போதே இந்த விடயம் தொடர்பில் தெரிவிக்கப்பட்டது.

இந்தக் கலந்துரையாடலில் மேலும் தெரிவிக்கப்பட்டதாவது:-

குறிகாட்டுவானிலிருந்து நயினாதீவு நாகபூசணி ஆலயம் நோக்கிச் செல்வதற்கான படகுப் போக்குவரத்து ஒருவழிக் கட்டணம் 100 ரூபாவாக இருக்கும். அதற்கு மேல் எவரும் அறவிட முடியாது. அத்துடன், படகோட்டிகள் மதுப் பாவனையில் இருந்தால் படகு பறிமுதல் செய்யப்படும். அத்துடன் அடுத்த மூன்று மாதங்களுக்கு அந்தப் படகோட்டி எவ்வித படகையும் ஓட்டுவதற்குத் தடை விதிக்கப்படும். இதற்கு படகு உரிமையாளர்சங்கம் பூரண ஒத்துழைப்பை வழங்க வேண்டும்.

படகுகளில் பயணிக்கும்போது உயிர்காப்பு அங்கி அணியாது பயணிப்பது தடை விதிக்கப்பட்டுள்ளது. இந்த அறிவிப்பை ஒலிபெருக்கி மூலம் வழங்கவும் நடவடிக்கை எடுக்கப்படும். அத்துடன், உயிர்காப்பு அங்கிகள் பாவனைக்கு உகந்தவையாஎனவேலணைப்பிரதேசசெயலக உத்தியோகத்தர்கள், பொலிஸார் இணைந்து ஆய்வில் ஈடுபடுவார்கள் எனக் கூறப்பட்டது. (அ-ம-66)

## 33 பொது...

நிகழ்வு நேற்று உணர்வுபூர்வமாக இடம்பெற்றது. தாயக நினைவேந்தல் அமைப்பின்ஏற்பாட்டில்நிரோஜன்விளையாட்டுக் கழக மைதானத்தில் உள்ள நினைவுத் தூபியில் இந்த நினைவேந்தல் நிகழ்வுகள் இடம்பெற்றன. குறித்த தாக்குதலில் தனது சகோதரியை இழந்த பெண்ணொருவர் பொதுச்சுடரை ஏற்றிவைத்தார். அதைத் தொடர்ந்து ஏனையவர்களும் சுடரேற்றி மலர்மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தினார்கள்.

புதுக்குடியிருப்பு பிரதேசசபையின் தவிசாளர் வே. கரிகாலன் மற்றும் பிரதேச சபை உறுப்பினர்கள், அரசியற் தலைவர்கள், சிவில் அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் பொதுமக்கள் உட்பட பலர் நிகழ்வில் கலந்துகொண்டனர். (அ-ம-19)

## சுரேஷ்...

கோட்டை ரயில் நிலையத்துக்கு முன்பாக கடந்த மூன்று தினங்களாகப் போராட்டம் இடம்பெற்று வந்தது. முன்னாள் அமைச்சர்களான விமல் வீரவன்ஸ, உதய கம்மன்பில, சரத் வீரசேகர, டிரான் அலஸ் மற்றும் சிங்கள தேசியவாத அமைப்புகளின் பிரதிநிதிகள் இதில் பங்கேற்றிருந்தனர். இந்த நிலையில் நேற்று மாலையுடன் போராட்டம் கைவிடப்பட்டது.

போராட்டத்தைக் கைவிடுவது தொடர்பில் விமல் வீரவன்ஸ தெரிவித்ததாவது:-

சாலேவுக்கு நீதிகோரி கடந்த மூன்று நாள்களாக இடம்பெற்ற போராட்டத்தைத் தற்காலிகமாக முடிவுக்குக் கொண்டுவரத் தீர்மானித்துள்ளோம். சாலேவின் உடல் நிலை தொடர்பில் பரிசீலித்து அறிக்கை வழங்குவதற்கு ஐவர் கொண்ட விசேட மருத்துவக் குழுவை நீதிமன்றம் நியமித்துள்ளது. அந்தக் குழுவின் அறிக்கை நீதிமன்றத்தில் ஒப்படைக்கப்படும் வரை எமது போராட்டம் நிறுத்தப்ப டும். அந்த அறிக்கையில் திருப்தி இல்லாத பட்சத்தில் மீண்டும் போராட்டம் இடம்பெறும் - என்றார். (அ-ம-இ)

## உயிர்த்த...

தெரிவித்தார். நாடாளுமன்றத்தில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

உயிர்த்தஞாயிறுத் தாக்குதலுடன் சுரேஷ் சாலேவுக்கு நேரடித் தொடர்பு உள்ளது என்பதை நாங்கள் உறுதிப்படுத்தியுள்ளோம். நீர்கொழும்புப் பகுதியிலுள்ள தேவாலயத்துக்கு வரும் பக்தர்களின் தகவல்களை அவரே திரட்டியுள்ளார். உயிர்த்தஞாயிறுத் தாக்குதல் நடைபெறுவதற்கு மூன்று வாரங்களுக்கு முன்னதாக முஸ்லிம் பிரஜைகள் மூவரை வைத்து, நீர்கொழும்புப் பகுதியில் உள்ள கத்தோலிக்க தேவாலயத்தில் வழிபாட்டில் ஈடுபடவரும் பக்தர்களின் எண்ணிக்கை உள்ளிட்ட முக்கியமான தகவல்களைத் திரட்டுவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளார். இவ்வாறு தகவல் திரட்டுவதற்கு பயன்படுத்தப்பட்டவர்கள்வர்களில் ஒருவர், தேடப்பட்டுவரும் சந்தேகநபர் பட்டியலில் இருந்தவர். ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பின் சித்தாந்தத்தால் ஈர்க்கப்பட்டவர். உயிர்த்தஞாயிறுத் தாக்குதல் நடைபெற்ற நாளில் இருந்து அவர் மாயமாகியுள்ளார்.

ஸஹ்ரான் உட்பட சில அடிப்படைவாதிகளால் தாக்குதல் நடத்தப்படவுள்ளது என இராணுவ புலனாய்வுப் பிரிவு அதிகாரி ஒருவரால் தகவல் வழங்கப்பட்டும் உரிய நடவடிக்கை எடுக்கப்படவில்லை. இந்த அலட்சியப் போக்குமூலம் தாக்குதலுக்கு வழி ஏற்படுத்திக் கொடுத்தார். உளவுத் தகவலை வழங்கிய அதிகாரி சட்டத்துக்கு புறம்பாகக் கைது செய்யப்பட்டு பின்னர் விடுவிக்கப்பட்டார். அவரை கொழும்பிலுள்ள ஹோட்டலொன்றுக்கு அழைத்து சுரேஷ் சாலே மன்னிப்பு கோரியுள்ளார் எனவும் தகவல் கிடைத்துள்ளது. சனல் 4 ஊடகத்துக்கு அசாத் மௌலானா வழங்கிய தகவல்களின் அடிப்படையிலும் உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சம்பவத்தை நடத்துவதற்குரிய சூழல் சுரேஷ் சாலேவால் உருவாக்கிக் கொடுக்கப்பட்டுள்ளது. இவ்வாறானதொரு பின்புலத்திலேயே அவர் குற்றப்புலனாய்வுத்திணைக்களத்தால் கைது செய்யப்பட்டார்.

சந்தேகநபரொருவருக்கு வழங்கப்பட வேண்டிய உரிமைகள் சுரேஷ் சலேவுக்கு வழங்கப்பட்டுள்ளன. அந்த நடைமுறை மீறப்படவில்லை. சட்ட ஆலோசனை பெறுவதற்கு இடமளிக்கப்பட்டுள்ளது. கைது தொடர்பில் மனித உரிமை ஆணைக்குழுவுக்கு தெரியப்படுத்தப்பட்டது. நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்டு தடுப்புக்காவல் உத்தரவு பெறப்பட்டது. சந்தேகநபர் ஒவ்வொரு புதன்கிழமையும் சட்டத்தரணியை சந்திப்பதற்கு இடமளிக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் குடும்ப உறுப்பினருடன் தொலைபேசியில் கதைப்பதற்கு இடமளிக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு சனிக்கிழமையும் குடும்ப உறுப்பினர்கள் அவரை சந்திக்க முடியும். கோத்தபாய ராஜபக்சவுக்கு பயணத்தடை விதிக்கப்பட்ட பின்னர், சுரேஷ் சாலேவின் நடத்தையில் மாற்றம் ஏற்பட்டது. விசாரணைக்கு ஒத்துழைக்க மறுத்து, உண்ணாவிதரப் போராட்டத்தை ஆரம்பித்தார். தொலைபேசி மற்றும் மடிக்கணினி என்பவற்றின் கடவுச்சொற்களை வழங்கவில்லை. தகவல்களை மறைக்க முற்படுகின்றார். ஆனால் அவருக்கு எதிரான பல ஆதாரங்களை நாம் திரட்டியுள்ளோம். பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதி கிடைக்கும். அதற்கான முழு ஈடுபாட்டுடன் செயற்பட்டு வருகின்றோம் - என்றார். (அ-ம)

## பாடகர்...

விடுத்துள்ளார். நாடாளுமன்றத்தில் நேற்று அவர் மேலும் தெரிவித்ததாவது:-

கிளிநொச்சி மாவட்டத்தின் உதயநகர் கிழக்கு பகுதியைச் சேர்ந்த கணேஸ்குமார் சுஜீத்சன் என்னும் சொல்லிசைப் பாடகர் பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு சிறைவைக்கப்பட்டுள்ளார். இந்த நாட்டில் காலத்துக்குக் காலம் இவ்வாறான கலைஞர்களும், படைப்பாளர்களும், ஊடகவியலாளர்களும் தமது கருத்துக்களை சுதந்திரமாக வெளிப்படுத்தியதற்காக பயங்கரவாத குற்றத்தடுப்புப் பிரிவால் விசாரணைக்கு அழைக்கப்பட்டு அச்சுறுத்தப்பட்டுள்ளனர். பல படைப்புக்கள் வெளியீடு செய்யமுடியாமல் தடுத்து வைக்கப்பட்டுள்ளன. தற்போது இந்தக் கலைஞனுடைய கைது இடம்பெற்றிருக்கின்றது. அடக்குமுறைக் கருவியாகப் பயங்கரவாதத் தடைச்சட்டத்தைப் பயன்படுத்துவதால்தான் அதை உடனடியாக நீக்குமாறு வலியுறுத்தி வருகின்றோம். இந்த நாட்டுக்கு பயங்கரவாதத் தடைச்சட்டம் தேவையில்லை - என்றார். (அ-ம-26)

## செம்மணிப்...

மூன்றாம்கட்ட அகழ்வுப் பணிகளின் 21 ஆம் நாள் நடவடிக்கைகள் நேற்று இடம்பெற்று வந்தன. இதன்போதே புதைகுழிக்குள் மேலும் 12 என்புத் தொகுதிகள் அடையாளம் காணப்பட்டுள்ளன. அத்துடன் 4 சிறுவர்களின் என்புத் தொகுதிகள், 2 சிசுக்களின் என்புத் தொகுதிகள் உட்பட 7 என்புத் தொகுதிகள் அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளன. இதன்படி, செம்மணிப் புதைகுழியில் இருந்து இதுவரை 339 என்புத் தொகுதிகள் அடையாளம் காணப்பட்ட நிலையில், 318 என்புத் தொகுதிகள் மீட்கப்பட்டுள்ளன.

யாழ்ப்பாண நீதிவான் நீதிமன்ற நீதிவான் எஸ். லெனின்குமார் முன்னிலையில் அகழ்வுப் பணிகள் நடைபெற்று வருகின்றன. தொல்லியல் பேராசிரியர் ராஜசோமதேவா தலைமையிலான குழுவினர், சட்ட மருத்துவ அதிகாரி செல்லையா பிரணவன், குற்றப் புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகள், சட்டத்தரணிகள், துறைசார் நிபுணர்கள், ருகுணு பல்கலைக்கழக மாணவர்கள் ஆகியோர் அகழ்வுப் பணிகளில் ஈடுபட்டு வருகின்றனர். (அ-ம-26)

## பாலச்சந்திரனின்...

நாடாளுமன்றத்தில் நேற்று அவர் மேலும் தெரிவித்ததாவது:-

பிரபாகரனின் மகன் படுகொலை செய்யப்பட்டதாக சனல்-4 ஊடகம் கூறியிருந்த நிலையில், அந்த ஊடகம் பொய் கூறுகின்றது என்று பிரிட்டனில் உள்ள இலங்கைத் தூதரகம் மறுப்புத் தெரிவித்துள்ளது. சனல் 4 ஊடகம் வெளியிடும் ஆவணப்படத்தில் பிரபாகரனின் மகன் பாலசந்திரன் கொல்லப்பட்டமை தொடர்பான தகவல்கள் உள்ளன.

பாலசந்திரன் தொடர்பில் இதற்கு முன்னர் சில ஒளிப்படங்கள் வெளிவந்திருந்தன. பதுங்கு குழியில் அவர் உணவுடன் அமர்ந்துள்ளதைப் போன்ற ஒளிப்படம் முதலில் வெளிவந்திருந்த நிலையில், அவர் துப்பாக்கிச் சன்னங்களின் ஓட்டைகளுடன் சடலமாகக் கிடப்பதைப்போன்று அடுத்தபடம் அமைந்திருந்தது. பிரபாகரனின் மகனாகவே இருந்தாலும் இவ்வாறு நடந்திருக்கக்கூடாது. ஜே.வி.பி.யின் தலைவர் ரோஹண விஜேவீர சொல்லப்பட்டபோது அவருடைய குடும்ப உறுப்பினர்கள் அப்போதைய அரசாங்கத்தால் பாதுகாக்கப்பட்டனர்.

அதேபோல ஸஹ்ரான் உயிரிழந்தபோதும் அவரது மகள் பாதுகாப்பாக இருக்கின்றார். நிலைமை இவ்வாறு இருக்கையில் ஏன் பிரபாகரனின் மகன் மட்டும் கொல்லப்பட வேண்டும்? எனவே இந்த விடயத்தை போர்க்குற்றமாகக் கருதி விசாரணை நடத்த வேண்டும் - என்றார். (அ-ம-இ)

## புதையல்...

களைத் தேடியபோதே அவர்கள் அனைவரும் கைது செய்யப்பட்டனர் என்று கிளிநொச்சி பொலிஸார் தெரிவித்துள்ளனர். சந்தேகநபர்கள் அனைவரையும் கிளிநொச்சி நீதவான் நீதிமன்றத்தில் முற்படுத்தும் நடவடிக்கைகள் தற்போது இடம்பெற்று வருகின்றன. (அ-ம-113)

## நகை...

இரு சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். பண்டத்தரிப்பு-பற்றிமா வீதியில் நான்கரைப் பவுண் நகைகள் திருடப்பட்டமை தொடர்பில் பொலிஸாரிடம் முறைப்பாடு வழங்கப்பட்டிருந்தது. அந்த முறைப்பாட்டுக்கு அமைய முன்னெடுக்கப்பட்ட மேலதிக விசாரணையின் அடிப்படையிலேயே இரண்டு சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டனர். அவர்கள் மல்லாகம் நீதவான்நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்டு நிலையில் எதிர்வரும் 24ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. (அ-ம-26)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# உமையாள்புரம் கிராமத்தில் 300 மரக்கன்றுகள் நடுகை

கிளிநொச்சி, ஜூன் 11

உலக சுற்றாடல் தினத்தை முன்னிட்டு, கண்டாவளைப் பிரதேச செயலகத்துக்குட்பட்ட உமையாள் புரம் கிராம அலுவலர் பிரிவில் 300 மரக்கன்றுகளை நடும் விசேட நிகழ்வு அண்மையில் இடம் பெற்றதுஇந்த மரநடுகைத் திட்டத்தை வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் உத்தியோக பூர்வமாக ஆரம்பித்துவைத்தார்.

கண்டாவளைப் பிரதேச செயலகத்தினர் மற்றும் உமையாள்புரம் கிராமமக்கள் இணைந்து இதனை ஏற்பாடுசெய்தனர். 'நிலா இம்பக்ட்' நிறுவனத்தினர் அனுசரணை வழங்கியிருந்தனர். நிகழ்வில் பாடசாலை மாணவர்களுக்கு மரக்கன்று கள் வழங்கப்பட்டன. மேலும், பரந்தன் நகரப் பகுதியில் சுற்றாடலைத் துப்புரவுசெய்யும் சிரமதான நடவடிக்கையும் ஆரம்பித்துவைக்கப்பட்டது. (க -113)

ஆண் வேலையாள் தேவை
யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள செல்லப்பிராணிகள் விற்பனை செய்யும் கடைக்கு ஆண் வேலையாள் தேவை.
சாப்பாடு, தங்குமிட வசதி உண்டு.
சம்பளம் 60,000/- - 70,000/- வழங்கப்படும்.
மாதத்தில் 4 நாட்கள் விடுமுறை
077 937 0000, 075 988 1000



# விழிப்புணர்வுக் கருத்தரங்கு

உலக சுற்றாடல் தினத்தை முன்னிட்டு சுற்றாடல் அமைச்சின் ஏற்பாட்டில் கிளிநொச்சி மாவட்டச் செயலகத்தின் ஒழுங்குபடுத்தலின்கீழ் சுற்றாடல் மாற்றங்களுக்கு எதிராக செயற்படுவோம் எனும் தொனிப்பொருளின்கீழ் சாரணிய மாணவர்களுக்கான விழிப்பு ணர்வுக் கருத்தரங்கு அண்மையில் கிளிநொச்சி மாவட்டச் செயலத் திறன் விருத்தி மண்டபத்தில் நடைபெற்றது. மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் சுற்றாடல் உத்தியோகத்தர் சி.லதீஸ்குமார் வளவாளராகக் கலந்துகொண்டு செயலமர்வை நடத்தியிருந்தார். (ச)

வீட்டுப் பணிப்பெண் சைவ சமயத்தில் தேவை
சுன்னாகம் கிழக்கில் ஓய்வுபெற்ற ஆசிரியர்களின் வீட்டில் இரவு பகலாக நிரந்தரமாக தங்கி நின்று வயோதிப அம்மாவையும் தனது வேலைகளை தன்னாலல் செய்ய முடியாத அக்காவையும் பராமரித்து சகல வேலைகளும் செய்வதற்கு வீட்டுப் பணிப்பெண் சைவசமயத்தில் உடன் தேவை.
வயது 18 தொடக்கம் 59 வயது வரையான பெண்கள் தேவை.
இடம்: சுன்னாகம் கிழக்கு, சுன்னாகம்.
தொடர்புகளுக்கு:-
077 150 2570, 076 211 6016
076 362 4279, 074 197 5230
(CS/61622) J-1

# மரண அறிவித்தல்

தோற்றம்
19 . 02 . 1973



மறைவு
09 . 06 . 2026

## ஜியிதா நிசாகரன் (பவுண்)

கைதடி மேற்கை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட ஜியிதா நிசாகரன் (பவுண்) அவர்கள் கடந்த (09.06.2026) செவ்வாய்க்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வினாசித்தம்பி - அன்னம்மா தம்பதியரின் இளைய புதல்வியும், சின்னத்தம்பி - கமலம் தம்பதியரின் மூத்த மருமகளும், சின்னத்தம்பி, நிசாகரன் (நிர்வாக உத்தியோகத்தர் - விளையாட்டுத் திணைக்களம், வடமாகாணம்) அவர்களின் அன்பு மனைவியும், சங்கீரணி, தரங்கினி ஆகியோரின் பாசமிகு தாயாரும், பாஸ்கர், வனிதா, அமுதா, சிறீதர் ஆகியோரின் அன்புத் தங்கையும், துரைசிங்கம், காலஞ்சென்ற ஜோன்சன், மற்றும் பைங்கிளி, ஞானசீலி, வசீகரன், சுமன் ஆகியோரின் பாசமிகு மச்சாளும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11.06.2026) வியாழக்கிழமை முற்பகல் 09.00 மணியளவில் அவரது இல்லத்தில் (மானிப்பாய் வீதி, கைதடி) நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக ஐவினைப்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கைதடி மேற்கு,
கைதடி.

தகவல்: குடும்பத்தினர்
077 997 9659, 077 985 9369

(CS/61625) J-1

# மாணவிக்குப் பாலியல் தொல்லை சு.க. தொகுதி அமைப்பாளர் கைது

கொழும்பு, ஜூன் 11

பாடசாலை மாணவி ஒருவருக்கு பாலியல் தொல்லை கொடுத்த சம்பவம் தொடர்பில், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் அரணாயக்க தொகுதி அமைப்பாளரும், அரணாயக்க பிரதேச சபை உறுப்பினருமான சந்தேகநபர் ஒருவர் கடந்த ஞாயிற்றுக்கிழமை மாலை கைதுசெய்யப்பட்டுள்ளார் என்று மாவனல்லை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மாவனல்லை, கணேதென்ன, ஹிங்குல பிரதேசத்தைச் சேர்ந்த 19 வயதுடைய மாணவி ஒருவர் மாவனல்லை சிறுவர் மற்றும் மகளிர் பணியகத்தில் செய்த முறைப்பாட்டின் அடிப்படையில் இந்த சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார். ஆரம்பகட்ட பொலிஸ் விசாரணைகளின்படி, சந்தேகநபர் ஹெம்மாத்தகம - மாவனல்லை வீதியில் தேவனகல பிரதேசத்தில் உள்நாட்டு ஆயுர்வேத மருத்துவ மையம் ஒன்றை நடத்தி வருகிறார். மாணவியின் கிரக தோஷம் அல்லது தீய சக்திகளை நீக்குவதற்காக பரிகாரப் பூஜை செய்வதாகக் கூறி இந்த துஷ்பிரயோகம் செய்யப்பட்டுள்ளார் என்ற கூறப்படு கின்றது. (எ-இ)



# ஆண்டு நிறைவு விழா

யாழ்ப்பாணம், ஜூன் 11

இளவாலை பகுதியில் பல கிராமங்களை உள்ளடக்கி இயங்கிவரும் மக்கள் வலுவூட்டல் மையமாகிய 'எழுச்சியகம்' தனது 15ஆவது ஆண்டு நிறைவு விழாவை அண்மையில் கொண்டாடியது. இதன்போது மாணவர்களின் திறமைகளை வெளிப்படுத்தும் பல்வேறு கலைநிகழ்வுகள் அரங்கேறியதுடன், மையத்தின் வளர்ச்சிக்குப் பாடுபட்ட ஆளுமைகளுக்குக் கௌரவிப்புகள் இடம்பெற்றன. நிகழ்வில் வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகம் கலந்துகொண்டு முதன்மை உரையை நிகழ்த்தினார். (ச-இ)

செய்தி : 021 493 0000 - விளம்பரம் : 021-493 1111 செய்தி : .news@uthayan.com விளம்பரம்:advt@uthayan.com
இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 அம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 11.06. 2026 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media